தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

ரூ. 15/– | மலர் 18 - இதழ் 07 – நவம்பர் 2016 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் – உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
திட்ட இயக்குநர், புதுவாழ்வு திட்டம்

அன்புள்ள சுய உதவிக் குழுக்களின் மகளிரே,

ஆண்களுக்கு நிகராய் இன்று பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சாதனைகளை படைத்து வருகின்றனர். பெண்கள் மேற்கொள்ளாத பணிகளே இல்லை என்ற நிலை உருவாகி வருகிறது.

இன்று பெண்கள் அடைந்துள்ள வெற்றிகள் யாவும் அவர்களின் தன்னம்பிக்கையாலும் தளராத முயற்சியாலும் பெற்றவை ஆகும். இந்நிலையை அடைவதற்காக பெண்கள் எதிர்கொண்ட சிரமங்கள்... தடைகள்... எவ்வளவு தெரியுமா? அவை அனைத்தையும் தகர்த்து 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என்ற பாரதியின் வரிகளுக்கு ஏற்ப புதுமைப் பெண்களாக இன்று வெற்றிப் பாதையில் நடைபோட்டு வருகின்றனர்.

ஆனாலும் இன்றும் சில இடங்களில் பெண்களுக்கு எதிரான தாக்குதல்கள், பாலியல் ரீதியான தாக்குதல்கள், சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்புதல் என எத்தனை எத்தனை இடர்பாடுகள் பெண்களுக்கு ஏற்படுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆண்களை விட பெண்கள் மன வலிமை மிகுந்தவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் உள்ளனர் என்பதை அவர்கள் படைத்துள்ள சாதனைகளின் வாயிலாக அனைவரும் அறிவார்கள்.

தன்னம்பிக்கைக்கும், அயராத உழைப்பிற்கும், தளராத செயல்பாட்டிற்கும் எடுத்துக் காட்டாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களான உங்களைச் சொல்லலாம். இன்று நீங்கள் அடைந்துள்ள வெற்றி சாதாரண மானது இல்லை. படிப்பறிவற்ற பெண்கள் கூட சுய உதவிக் குழுக்களில் இணைந்து, கல்வி கற்று, தொழில் பயிற்சி பெற்று, சுய தொழில் மேற்கொண்டு தொழில் முனைவோராகவும், பொருளாதார சுய சார்பு பெற்றவர்களாகவும் இருக்கின்றனர் என்பதை அறியும் போது, நான் மட்டுமல்ல அனைவரும் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உங்களின் முன்னேற்றத்திற்கு என்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், புதுவாழ்வு திட்டம் போன்றவை துணை நிற்கும் என்று கூறி, உங்களின் உற்ற தோழியான முற்றத்தின் வளர்ச்சிக்கு உங்களின் பங்கினை செலுத்துங்கள், நீங்கள் மட்டுமல்லாது மற்றவர்களையும் முற்றத்தில் இணைத்திடுங்கள் என்று அன்புடன் கேட்டுக் கொண்டு, நீங்கள் மேற்கொண்டுள்ள வெற்றிப் பயணத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

வே. சாந்தா

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

உடல் நலனுக்கு ஏற்ற இயற்கை உணவுகள் 07

சிறப்பு ஒருங்கிணைப்பு கருத்துப் பட்டறை 05

தமிழ்நாடு ஊரக உருமாற்றுத் திட்டம் 12

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார இயக்கம் 23

குழந்தைகளுக்கான தடுப்பூசி அட்டவணை 10

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் 29

சிறப்பு நிலுவைக் கடன்கள் வசூலிப்பு முகாம் 26

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகை, குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்களாக உள்ள ஏழை எளிய மக்கள் இன்று பொருளாதார வளர்ச்சி பெற்றவர்களாக மாறிய வெற்றிக் கதைகள், பயனுள்ள குறிப்புகள், பல்வேறு வகையான செய்திகள் போன்றவை முற்றம் இதழில் சிறப்பாக வெளியிடப்படுகின்றன.

திருமதி. தங்கமணி செல்வராஜ்,
தங்கத் தாரகை மகளிர் சுய உதவிக் குழு,
உமையாள்புரம், தஞ்சாவூர் மாவட்டம்.

புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றின் மூலம் புதுவாழ்வு பெற்ற ஏழை எளிய மக்களின் வாழ்வாதார வளர்ச்சி குறித்த கட்டுரைகளும், சுகாதார நலவாழ்வு பெறுவதற்கான செய்திகளும், பெண்கள் விழிப்புணர்வு பெறுவதற்கான கட்டுரைகளும் முற்றம் இதழில் நிறைய உள்ளன.

திருமதி. கீதா ராமகிருஷ்ணன்,
உடையாப்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம்,
உடையாப்பட்டி, சேலம் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மட்டுமல்லாது, ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் குறித்த செய்திகளும், இன்னபிற கட்டுரைகளும், படங்களும் முற்றம் இதழில் சிறப்பாக உள்ளன. மகளிருக்கு பயனுள்ள புத்தகமாக முற்றம் இருக்கிறது. முற்றத்திற்கு வாழ்த்துகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
வெற்றி மகள் மகளிர் சுய உதவிக் குழு,
தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பொருளாதார முன்னேற்றம் பெற்ற கடற்கரையோரப் பகுதி மக்களின் வெற்றிக் கதைகளையும், திட்டத்தின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகளையும் முற்றம் இதழ் மாதந்தோறும் அழகுற வெளியிட்டு வருகிறது. முற்றம் இதழ் மேலும் வளர வாழ்த்துகள்.

திருமதி. துர்க்கா தேவி முத்துராமன்,
தங்க மீன்கள் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மலர் 18 – இதழ் 07 – நவம்பர் 2016

விலை ரூ. 15/–

கௌரவ ஆசிரியர்

திருமதி. **வே. சாந்தா,** இ.ஆ.ப.,

முதன்மை செயல் அலுவலர்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்

எஸ். சின்னப்பன்

செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்

எஸ். அமிர்த ஜோதி

பொது மேலாளர்

ஆசிரியர் குழு

கோ. லட்சுமிபதி

கூடுதல் இயக்குநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

சி. சுஜாதா ஜேக்கப்

கூடுதல் இயக்குநர்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பா. செல்வராஜன்

கூடுதல் திட்ட இயக்குநர் – புதுவாழ்வு திட்டம்

சு. சிநேகலதா

கூடுதல் திட்ட இயக்குநர் – புதுவாழ்வு திட்டம்

மு. கருணா

தகவல் தொடர்பு வல்லுநர் (பொ) – புதுவாழ்வு திட்டம்

பொறுப்பாசிரியர்

சு, மகேஷ்வரன்

மக்கள் தொடர்பு அலுவலர்

துணை ஆசிரியர் முற்றம்

ஏ. கண்ணன்

முதுநிலை கணக்காளர்

சு. சசிகலா

பிழை திருத்துபவர்

எஸ். எஸ். ரவிச்சந்திரன்

கணினி வடிவமைப்பு

கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்'

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்னை தெரசா மகளிர் வளாகம்,

வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,

நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497

044 – 2817 3412 / 3413

தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

அதிரடிப் பாடம்...

அன்புள்ள வாசகர்களுக்கு,

மார்கழி மாதம் பொதுவாக குளிர்ச்சியான, மகிழ்ச்சியான மற்றும் உற்சாகமான மாதமாகும். ஆனால், இந்த ஆண்டு பருவமழை வருமா? என்ற சந்தேகத்தால் விவசாயிகளின் முகங்களில் சோகமே சூழ்ந்துள்ளது. சென்ற ஆண்டு இதே நாட்களில் பெய்த பருவமழையால், தமிழகத்தின் பல பகுதிகள் பேரழிவை சந்தித்தன. ஆனால், இந்த ஆண்டில் இதுவரை பருவமழை தொடங்கவே இல்லை என்பது அனைவரையும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது.

சென்ற ஆண்டு நிரம்பி வழிந்த நீர் நிலைகள் அனைத்தும் தற்போது வறண்ட நிலையில் கிடக்கின்றன. பருவமழை பொய்த்து, வரும் ஆண்டில் வறட்சி ஏற்பட்டு விடக்கூடாது என்பதுதான் அனைவரின் கருத்தாகும். காரணம், வறட்சியும் பேரழிவை உருவாக்கும் ஒரு இயற்கைச் சீற்றமாகும்.

இந்த ஆண்டு, பேரிடரால் ஏற்படும் சிரமங்களைக் குறைத்துக் கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்த விதம் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அனைத்துத் துறைகளையும் கலந்து ஆலோசித்து, முன்னெச்சரிக்கையாக பல நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தியதும், நீர் நிலைகள் மற்றும் வடிகால் கள் அனைத்தும் தூர் எடுத்து ஆழப்படுத்துவதும், பெரும்பாலான இடங்களில் செய்யப்பட்டிருந்த நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அனைத்தையும் அகற்றி வருவது போன்ற நல்ல நடவடிக்கைகள் வரவேற்கக் கூடியது. இந்த நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகிறது.

அதிரடி நடவடிக்கையான 500 மற்றும் 1000 ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என மத்திய அரசு அறிவித்ததில் பல நன்மைகளும், ஒரு சில தற்காலிக நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. இந்த நடவடிக்கையால் மகளிர் குழுக்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் என்னவெனில், அனைத்து மகளிர் குழுக்களும், தங்கள் குழுவின் பெயரில் செயல்படுத்தப்பட்டு வரும் வங்கிக் கணக்கின் மூலம் மட்டுமே பண பரிவர்த்தனை செய்ய வேண்டும். அவ்வாறு வங்கியில் பணத்தை செலுத்தாமல் நேரடியாக பணத்தை சுழற்சி செய்வதால், அக்குழு பல சிக்கல்களை சந்திக்க நேரிடும்.

அதோடு, தனி நபர்களும் தங்கள் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பித்து, அதன் மூலமே பண பரிவர்த்தனை செய்யும் பழக்கத்தினை இப்பொழுது ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இது எதிர்காலத்தில் பல பிரச்சனைகளில் இருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள உதவும்.

முற்றம் வாசகர்கள் அனைவருக்கும் தீபத் திருநாள் மற்றும் கிறிஸ்து பிறப்பு நாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

(எஸ். சின்னப்பன்)

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சிறப்பு ஒருங்கிணைப்பு கருத்துப் பட்டறை

சிறப்பு ஒருங்கிணைத்தல் திட்டம் நான்கு NRLP மாவட்டங்களில் செயல்பட உள்ளது. இத்திட்டம் உலக வங்கியின் நிதியில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் (NRLM) மூலம் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமே அரசின் அனைத்து துறையிலிருந்தும் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவையும் ஒருங்கிணைத்து இலக்கு மக்களுக்கு சென்றடைய செய்வதே ஆகும்.

இதையொட்டி அனைத்து துறைகளிலிருந்தும் இயக்குநர்கள் அல்லது துணை இயக்குநர்களை அழைத்து, இத்திட்டத்தை எப்படி செயல்படுத்தலாம் என்பதைப் பற்றி விவாதம் செய்யவும் மற்றும் மற்ற துறைகளில் உள்ள திட்டங்களைப் பற்றிய விரிவான பதிவுகளை செய்யவும், Convergence Rollout Workshop 25.10.2016 மற்றும் 26.10.2016 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கத்தின் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கருத்துப் பட்டறையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் திருமதி. சுஜாதா ஜேக்கப் அவர்கள், இணை இயக்குநர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு நான்கு மாவட்டங்களிலும் சிறப்பு ஒருங்கிணைத்தல் மேற்கோள்ள உரிய செயல் திட்டத்தை வகுத்தனர்.

பின்னர் நான்கு NRLP மாவட்டங்களின் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், திருச்சி வட்டாரத்தை சேர்ந்த கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பிரதிநிதி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதி மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. ■

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், 19.11.,2016 அன்று தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இலட்சுமிபுரம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் செயல் பாடுகளை ஆய்வு செய்தார்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள், சிறப்பு நிதி யின் மூலம் இதுவரை மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கு தனிநபர் கடன் உதவி வழங்கப்பட்டு, அதன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில் நடவடிக்கைகள், இளைஞர் திறன் வளர்ப்பு பயிற்சிகள், சுய உதவிக் குழுக்கள், வங்கி நிதி இணைப்பு, ஒத்த தொழில் குழுக்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை கிராம வறுமை ஒழிப்புச் சங்க நிதி பயன்பாடு மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு ஆகியவற்றை கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் உறுப்பினர்களிடம் கலந்தாய்வு மூலம் கேட்டறிந்ததுடன், மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளையும் வாழ்த்துகளையும் முதன்மை செயல் அலுவலர் அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, தேனி மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் (பொ) திரு. சு. பால்ராஜ் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நேரடிக் கடன் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 24.10.2016 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மக்கள் குறை தீர்க்கும் முகாமில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி யளிப்பு திட்டத்தில் 100 நாட்கள் வேலை முடித்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு (Project Life) மகளிர் திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்புடன் கூடிய வாழ்வாதார பயிற்சியாக சில்லறை வர்த்தக பயிற்சியினை முடித்த 60 நபர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஆர். கெஜலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், பயிற்சி நிறைவு சான்றிதழ்களை வழங்கினார்.

மேற்படி பயிற்சியினை முடித்தவர்கள் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்பினைப் பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 18 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மளிகை கடை, பேன்சி ஸ்டோர், கறவை மாடு வளர்த்தல், அரிசி வியாபாரம் ஆகியவை மேற்கொள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியா மற்றும் இந்தியன் வங்கி ஆகியவற்றின் மூலமாக நேரடிக் கடனாக ரூபாய் 53,80,000/–ம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திருமதி. சரஸ்வதி கணேசன், முன்னோடி வங்கி மேலாளர், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சௌரிராஜன், சி.எம்.எஸ்.டி.ஐ. நிறுவன இயக்குநர் திரு. ஜார்ஜ் பெர்னட், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

உடல் நலனுக்கு ஏற்ற இயற்கை உணவுகள்

இன்றைய காலகட்டத்தில் நாம் உண்ணும் உணவில் என்ன சத்துக்கள் உள்ளன என்பது நம்மில் பலருக்குத் தெரியாது. இதன் காரணமாக உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை நாம் சாப்பிடுகிறோம்.

அரிசி – அரிசியில் பச்சரிசி, புழுங்கல் அரிசி என்பவை குறிப்பிடத்தக்கவை. பச்சரிசி எளிதில் ஜீரணிக்காது. கொழுப்புச் சத்தை அதிகமாக்கும். உடல் இளைத்தவர்கள் பச்சரிசி சாப்பிடலாம். வயிறு தொடர்பான நோய் உள்ளவர்கள் பச்சரியை தவிர்க்க வேண்டும். புழுங்கல் அரிசி உடல் நலனுக்கு ஏற்றது. மலச்சிக்கல் ஏற்படாது. சம்பா அரிசி வகையில் சீரக சம்பா ஆரம்ப நிலை வாத நோய்களைப் போக்க வல்லது. பசியை ஊக்குவிக்கும். ஈர்க்குச் சம்பா அரிசி சாப்பிட ருசியானது. ஆனால் பித்தம் கூடும். குண்டு சம்பா, மிளகு சம்பா, மல்லிகை சம்பா, மணிச்சம்பா, கோரைச் சம்பா, கடைச் சம்பா, குறுஞ்சம்பா போன்றவை மருத்துவ குணம் நிறைந்தவை.

சோளம் – சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம் போன்ற சத்துக்கள் அடங்கி உள்ளன. சோள உணவுகள் உடலுக்கு உறுதியை அளிக்க வல்லவை. வயிற்றுப் புண்ணை ஆற்றும். வாய் நாற்றத்தைப் போக்கும். மூல நோயாளிகளுக்கு சோள உணவுகள் ஒத்துக் கொள்ளாது.

கம்பு – கம்பு உணவுகள் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்றது. கம்பில் புரதம், சுண்ணாம்பு, பாஸ்பரஸ் போன்ற தாதுக்களும், உயிர்ச் சத்துக்களும் உள்ளன. அரிசியை விட பல மடங்கு சத்து மிகுந்த கம்பு உணவு, ஜீரண சக்தியை அதிகரிக்கும். உடல் வெப்ப நிலையை சம நிலையில் வைத்திருக்கும். வேண்டாத கொழுப்புகளைக் கரைத்து உடல் பருமனைக் குறைக்கும்.

சாமை – சாமை உணவுகள் அனைத்து வயதினருக்கும் ஏற்றது. மலச்சிக்கலைப் போக்கும். வயிறு சம்பந்தமான நோய்களைக் கட்டுப்படுத்தும். நீரிழிவு நோயாளிகள் கூட சாமை உணவுகளை சாப்பிடலாம்.

வரகு – நவதானியங்களில் ஒன்றான வரகில் புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்து போன்றவை உள்ளன. இதனை அரிசிக்கு மாற்றாகப் பயன்படுத்தி, இட்லி, தோசை, ஆப்பம், பணியாரம், பொங்கல், பாயாசம் என்று வகைவகையாக செய்து சாப்பிடலாம். இது உடல் எடையைக் குறைக்கக் கூடியது. மாதவிடாய் கோளாறு உடைய பெண்கள் வரகைச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது.

கேழ்வரகு – தானியங்களில் அதிக சத்து மிகுந்த கேழ்வரகை, ராகி என்றும் சொல்வார்கள். இதில் புரதம், தாது உப்பு, சுண்ணாம்புச் சத்து, இரும்புச் சத்து மற்றும் உயிர்ச்சத்துக்கள் இருக்கின்றன. இது உடல் உஷ்ணத்தை சமநிலையில் வைத்திருக்கும். குடலுக்கு வலிமை அளிக்கும். நீரிழிவு நோயாளிகள் கூட கேழ்வரகால் செய்த பண்டங்களைச் சாப்பிடலாம். கேழ்வரகைக் கொண்டுதான் ராகி மால்ட் தயாரிக்கிறார்கள்.

கோதுமை – அரிசியை விட கோதுமையில் அதிகமான சத்துக்கள் உள்ளன. எண்ணை, நெய் சேர்க்காது சப்பாத்தியாக செய்து சாப்பிடுவது உடல் நலனுக்கு உகந்ததாகும். கோதுமையில் புரதம், சர்க்கரை, சுண்ணாம்பு, பாஸ்பரஸ், இரும்பு, கரோட்டின், நியாசிக் போன்ற பல சத்துக்கள் உள்ளன. இது நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறந்த உணவாகும்.

பார்லி – குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சாப்பிடத் தகுந்தது பார்லி. இதைக் கஞ்சியாக காய்ச்சி நோயாளிகளும் சாப்பிடலாம். உடலில் உள்ள தேவையற்ற நீரை வெளியேற்ற எடையைக் குறைக்கும். உடல் வறட்சியைப் போக்க வல்லது. நீடித்த மலச்சிக்கல் உள்ளவர்கள் பார்லியை சாப்பிட்டால் குணமாகும். காய்ச்சலை தடுக்கும். உடல் வெப்ப நிலையை சமநிலையில் வைத்திருக்கும் சிறுநீர் தாராளமாகப் பிரிய உதவும். குடல் புண்ணை ஆற்றும். இருமலைத் தணிக்கும். எலும்புகளுக்கு உறுதி தரும்.

மழைக்காலத்தில் உடல் பராமரிப்பு

மழைக்காலம் ஆரம்பிக்கும் போது எந்நேரமும் மழை பெய்து கொண்டே இருக்கும். இந்தக் காலத்தில் பலரும் சளித் தொல்லையால் அவதிபடுவர். சாலைகளில் தேங்கியிருக்கும் தண்ணீரில் நடப்பவர்களுக்கு கால்களில் சேற்றுப்புண் வர வாய்ப்புள்ளது. எனவே மழைக் காலத்தில் உடலை எப்படி பராமரிப்பது என்பதைப் பற்றி பார்ப்போம்.

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தலைக்கு குளிப்பது நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொள்ளவும். அதே போல் முழங்காலில் இருந்து கணுக்கால் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் பசை தடவி மசாஜ் செய்து கொண்டால் மழை நாட்களில் இந்த இடங்களில் பூஞ்சை (பங்கஸ்) தாக்குதல் இருக்காது.

தினமும் இரவு படுக்கப் போகும் முன்பு, ஒரு பாத்திரத்தில் சிறிது வெந்நீரை ஊற்றி, அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து, கைவிரல்களால் மசாஜ் செய்யுங்கள், இப்படிச் செய்தால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்று விட்டு வீட்டுக்கு வரும்போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி, சுத்தமான துணியால் ஈரத்தை துடையுங்கள். குளிக்கும் நீரில் ஒரு கைப்பிடி அளவு வேப்பிலையை போட்டு வைத்திருந்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்கவும். பெண்கள் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனெனில் கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும். மழைக்காலத்தில் மருதாணி போட்டுக் கொள்வதை தவிர்ப்பது நல்லது. மருதாணி குளிர்ச்சி என்பதால் சளி பிடிக்கும் வாய்ப்பு உள்ளது.

இரண்டு சக்கர வாகன பாதுகாப்பு பணியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள்

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர், மதுரை மாவட்ட ஆட்சியர் மற்றும் தெற்கு இரயில்வே மதுரை கோட்ட மேலாளர் ஆகியோரின் முழு முயற்சியுடன் இரயில் நிலையங்களில் பயணிகளின் இருசக்கர வாகனங்களின் பாதுகாப்பு பணியை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி மதுரை இரயில் நிலையத்தின் கிழக்கு நுழைவு வாயிலில் பயணிகளின் இருசக்கர வாகன பாதுகாப்பு பணியை ஸ்ரீ விநாயகா மகளிர் சிக்கன நாணய சங்கத் தின் உறுப்பினர்கள், 01.11.2016 முதல் மேற்கொண்டு வருகின்றனர். இதன் மூலம் வசூலிக்கும் தொகையில் இரயில்வே துறைக்கு 60%மும், ஸ்ரீ விநாயகா மகளிர் சிக்கன நாணய சங்கத்திற்கு 40%ம் பிரித்து வழங்கப்படுகிறது.

இவ்வாகனப் பாதுகாப்புப் பணிக்குத் தேவையான கூடாரம் அமைத்தல், வாகனங்களை முறையாக நிறுத்துதல், பில்லிங் இயந்திரம், கையால் எழுதப்படும் பட்டியல் மற்றும் பதிவேடு பராமரிப்பு குறித்த பயிற்சிகள் மாவட்ட வாங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழுவினருக்கு இரயில்வேத் துறை சார்பில் வாகன பாதுகாப்பு இடத்திற்கான மின் வசதி, அடையாள அட்டை, ஓவர் கோட் போன்றவை வழங்கப்பட்டுள்ளன. ■

மதுரை மாவட்டம்

கலந்தாய்வுக் கூட்டம்

சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தொகுப்பு வழிநடத்துநர்கள், வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள், சுகாதார தூதுவர்கள் ஆகியோர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் சிவகங்கை மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ அவர்கள் தலைமையில், சிவகங்கை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் 15.10.2016 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. பி. காஞ்சனா அவர்கள் கலந்து கொண்டு, சமுதாய வளப் பயிற்றுநர்கள், சுகாதார தூதுவர்களிடம் தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு மேற்கொள்ளும் பணிகள், தனி நபர் இல்லக் கழிப்பறை, திடக் கழிவு மேலாண்மை போன்றவற்றில் உள்ள இடர்பாடுகள் களைந்து, திறந்தவெளிக் கழிப்பிடம் இல்லா ஊராட்சிகளாக மாற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்து செயல் பட ஆலோசனைகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்டம்

காளையார் கோவில் ஒன்றிய வழிநடத்துநர், சமுதாய வளப் பயிற்றுநர் ஆகியோர் முழு சுகாதாரம் அடைந்திட தாங்கள் மேற்கொண்டுள்ள பணிகள் குறித்து விளக்கினர். இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், சமுதாய அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். ■

அம்மா சிமெண்ட் விற்பனை

நாகப்பட்டினம் மாவட்டம், பாப்பாக்கோவில் பகுதியில் செயல்பட்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள், பாப்பாக்கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து பல்வேறு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலுடன், கூட்டமைப்பின் சார்பில் நாகப்பட்டினம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 06.11.2015 முதல் அம்மா சிமெண்ட் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 54,374 சிமெண்ட் மூட்டைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் கூட்டமைப்பிற்கு ஊக்கத் தொகையாக ரூ. 80,000/– வரை கிடைத்துள்ளது.

தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய மகளிர் திட்டத்திற்கும், ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும் பாப்பாக்கோவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர். ■

நாகப்பட்டினம் மாவட்டம்

டெல்லி சாராஸ் கண்காட்சியில் தமிழக சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை அரங்கம்

நம் நாட்டின் தலைநகர் டெல்லியில் மண்டல அளவிலான சாராஸ் கண்காட்சி 14.11.2016 முதல் 27.11.2016 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை அரங்கினை அமைத்திருந்தன.

இந்தக் கண்காட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் 11 மகளிர் சுய குழுக்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் விற்பனை அரங்குகளை அமைத்திருந்தன.

மாண்புமிகு தமிழக செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் சாராஸ் கண்காட்சிக்கு வருகை தந்து, அங்கு அமைக்கப்பட்டிருந்த தமிழக சுய உதவிக் குழுக்களின் விற்பனை அரங்குகளைப் பார்வையிட்டு, குழுக்களின் உறுப்பினர்களிடம் பொருட்களின் விற்பனை குறித்த பல்வேறு விபரங்களை கேட்டறிந்தார்.

இந்நிகழ்வின் போது, ஒருங்கிணைப்பாளர்களான தஞ்சாவூர் மாவட்ட DSMS மேலாளர் திரு. சிவக்குமார் மற்றும் திருமதி. கவிதா ஆகியோர் உடனிருந்தனர். ■

கன்னியாகுமரி மாவட்டம்

சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவிகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 25.10.2016 அன்று நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் குமரன்குடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன் தொகையாக ரூபாய் 44 இலட்சமும், 8 சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடனாக ரூபாய் 91 இலட்சமும், 4 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி யாக ரூபாய் 45 ஆயிரமும் மற்றும் 17 மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு தனிநபர் கடனாக ரூபாய் 2.63 இலட்சம் என மொத்தம் ரூபாய் 1,38,08,000/-யினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்ஸி லீமா அமலினி, உதவித் திட்ட அலுவலர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. ப. அந்தோணிசிலுவை, திருமதி. எம். கலைச்செல்வி, திரு. எம். கே. பிச்சையா மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தொகுதி வழிநடத்துனர்கள் கலந்து கொண்டனர். ■

சமுதாய அமைப்பாளர்களுக்கு முதற்கட்ட பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் புதிதாக தேர்வு செய்யப்பட்ட சமுதாய அமைப்பாளர்களுக்கு முதற்கட்ட பயிற்சி 24.10.2016 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா சவான், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஊரக வாழ்வாதாரத் திட்ட இயக்குநர் திருமதி. த. கெட்ஸி லீமா அமலினி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சமுதாய அமைப்பாளர் திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும், வங்கி மேலாளர் (RSETI) திரு. இராமச்சந்திரன் அவர்கள் தர நிர்ணயம் குறித்தும், சுய உதவிக் குழுக்களுக்கான தணிக்கையின் முக்கியத்துவம் மற்றும் வரவு செலவு இரட்டைப் பதிவு முறை எவ்வாறு பதிவு செய்யப்பட வேண்டும் என்பது குறித்து திரு. சி. சுப்பிரமணியன் அவர்களும், திட்ட செயல்பாடுகள் குறித்து வாழ்வாதார இயக்க உதவித் திட்ட அலுவலர் திரு. எம். ஆறுமுகம் அவர்களும் விளக்கிக் கூறினார்கள். ■

குழந்தைகளுக்கான தடுப்பூசி அட்டவணை

தடுப்பூசி மருந்து மற்றும் தவணைகள்	எப்போது கொடுக்க வேண்டும்	தடுப்பு மருந்தின் அளவு	கொடுக்கும் முறை	கொடுக்க வேண்டிய இடம்
TT - 1 (இரண ஜன்னி)	தாய் கருவுற்றுள்ளார் என்று தெரிந்தவுடன்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	மேல் கை
TT - 2 (இரண ஜன்னி)	**TT - 1** போட்டு 4 வாரம் கழித்து	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	மேல் கை
TT - B (இரணஜன்னி ஊக்குவிப்பு தவணை**)**	முந்தைய கர்ப்ப காலத்திலிருந்து 3 வருடங்களுக்குள் இருந்தால் ஒருமுறை மட்டும் ஊக்குவிப்பு தவணை போதுமானது	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	மேல் கை
B.C.G. (காசநோய்)	குழந்தை பிறந்தவுடன் அல்லது ஒரு வயது முடிவதற்குள் (எவ்வளவு சீக்கிரம் முடியுமோ)	**0.1 ML**	தோலுக்குள் **(Intra Dermal)**	இடது மேல் கை
HEP-B* **(Birth Dose)**	குழந்தை பிறந்தவுடன் அல்லது 24 மணி நேரத்திற்குள்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	முன் நடுத்தொடையின் வெளிப்புறப் பகுதி
OPV-O	குழந்தை பிறந்தவுடன் அல்லது 15 நாட்களுக்குள்	2 சொட்டுகள்	வாய் வழியாக **(Oral)**	வாய் வழியாக
OPV - 1, 2 & 3	6 வாரம், 10 வாரம் மற்றும் 14 வாரங்கள்	2 சொட்டுகள்	வாய் வழியாக **(Oral)**	வாய் வழியாக
Pentavalent 1, 2 & 3	6 வாரம், 10 வாரம் மற்றும் 14 வாரங்கள்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	முன் நடுத்தொடையின் வெளிப்புறப் பகுதி
IPV - 1 & 2	6 வாரம் மற்றும் 14 வாரங்கள்	**0.1 ML**	தோலுக்குள் **(Intra Dermal)**	வலது மேல் கை
தட்டம்மை	9 – 12 மாதங்களுக்குள் (270 நாட்களுக்குப் பிறகு)	**0.5 ML**	தோலுக்கு கீழ் **(Subcutaneous)**	வலது மேல் கை
JE முதல் தவணை **(Endermic district only)**	9 மாதங்கள் நிறைவுற்ற பின்	**0.5 ML**	தோலுக்கு கீழ் **(Subcutaneous)**	இடது மேல் கை
DPT முதல் ஊக்குவிப்பு தவணை	16 – 24 மாதத்திற்குள்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	முன் நடுத்தொடையின் வெளிப்புறப் பகுதி
தட்டம்மை 2ஆம் தவணை	16 – 24 மாதத்திற்குள்	**0.5 ML**	தோலுக்கு கீழ் **(Subcutaneous)**	வலது மேல் கை
JE 2ஆம் தவணை **(Endermic district only)**	16 – 24 மாதத்திற்குள்	**0.5 ML**	தோலுக்கு கீழ் **(Subcutaneous)**	இடது மேல் கை
OPV ஊக்குவிப்பு	16 – 24 மாதத்திற்குள்	2 சொட்டுகள்	வாய் வழியாக **(Oral)**	வாய் வழியாக
DPT 2ஆம் ஊக்குவிப்பு தவணை	5 வருடத்தில்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	மேல் கை
TT	10 வருடம் மற்றும் 16 வருடத்தில்	**0.5 ML**	தசை வழியாக **(Intra Muscular)**	மேல் கை

TT இரண்டாம் தவணை அல்லது **TT** ஊக்குவிப்பு தவணை 36வது வாரத்திற்குள் கர்ப்பிணிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

தூய்மை, சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் குறித்த கலந்தாய்வுக் கூட்டம்

தமிழகத்தின் நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் கிராமப் பகுதிகளில் சுகாதார சீர்கேட்டை தடுக்கவும், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒருபகுதியாக ஊரக வளர்ச்சித்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு DPH ஆகியவற்றின் சார்பில் கிராமப்புறங்களில் தூய்மை, சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் 10.11.2016 அன்று சென்னை, தேனாம்பேட்டையில் உள்ள DMS / DPH வளாகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்தாய்வுக் கூட்டத்தில், தமிழ்நாடு DPH இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, கூடுதல் இயக்குநர் டாக்டர் பி. வடிவேலன், ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் திரு. கோ. இலட்சுமிபதி, முதுநிலை ஆலோசகர் SBM (G) திரு. கோ. இராதா (ஊரக வளர்ச்சித் துறை), DPH இணை இயக்குநர்கள் டாக்டர் சரவணன், டாக்டர் சி. சேகர், டாக்டர் சரவணன், டாக்டர் ஜி. கே. துரைராஜ் (எபிடோமலாஜிஸ்ட்), டாக்டர் ஐ. இருதயராஜ் (முதுநிலை மருத்துவ அனலிஸ்ட்), டாக்டர் எம். அப்துல் காதர் (எண்டோமலாஜிஸ்ட்), டாக்டர் ஏ. பால் ராம்சங்கர் (மருத்துவ அலுவலர்), டாக்டர் கே. செந்தில்குமார் (மருத்துவ அலுவலர்), திரு. எம். நடராஜன் (உதவி இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை), திரு. எஸ். சம்பத் (பிரிவு அலுவலர், DPH), திரு. பி. கண்ணன் (ஆலோசகர், ஊரக வளர்ச்சித் துறை) மற்றும் முற்றம் கண்ணன் (உதவி ஆசிரியர், முற்றம்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கிராமப்புறங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், சுற்றுச்சூழலைக் காத்தல், தனிநபர் இல்லக் கழிப்பறை அமைத்தல் போன்றவை குறித்து பல்வேறு செயல்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. ■

நீலகிரி மாவட்டம்

சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள், கணினி இயக்குநர்கள் மற்றும் புத்தகப் பராமரிப்பாளர்களுக்கு பயிற்சி

நீலகிரி மாவட்டத்தில், 50 தேயிலை ஒத்தத் தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டு, 1975ஆம் வருட தமிழ்நாடு சங்க பதிவுச் சட்டம், பிரிவு 16ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த தேயிலை ஒத்தத் தொழில் குழுக்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள புத்தகப் பராமரிப்பாளர்களுக்கு, பதிவேடுகள் பராமரிப்பு குறித்த பயிற்சி 18.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய இரண்டு நாட்கள் உதகை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்டத்தின் உதவித் திட்ட மேலாளரைக் கொண்டு இப்பயிற்சி நடத்தப்பட்டது.

அதேபோல் நீலகிரி மாவட்டத்தில் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரிய தற்காலிக அடிப்படையில் 14 சமுதாய ஒருங்கிணைப்பாளர்களும், 6 கணினி இயக்குபவர்களும் வெளிச்சந்தை மூலம் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு உதகை மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மைப் பயிற்றுநரைக் கொண்டு மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த 3 நாள் பயிற்சி 19.10.2016 முதல் 21.10.2016 வரை நடத்தப்பட்டது. ■

தமிழ்நாடு ஊரக உருமாற்றுத் திட்டம்

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் புதுவாழ்வு திட்டம் என்னும் வறுமை ஒழிப்புத் திட்டம் தமிழகத்தில் 25 மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டமாக ‘தமிழ்நாடு ஊரக உருமாற்றுத் திட்டம்’ என்னும் பெயரில் புதுவாழ்வு திட்டம் 2, தமிழகத்தில் 25 மாவட்டங்களில் வரும் ஜுலை 2017 முதல் ரூ. 900 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளதாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு ஊரக வருமாற்றுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு முன்னோடி மாவட்டங்களாக நாமக்கல், கடலூர், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன.

இதன் முதற்கட்டமாக நாமக்கல் மாவட்டத்தில் இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து ஆலோசனைக் கூட்டம், தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப,. அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாநில கூடுதல் திட்ட இயக்குநர் திரு. பா. செல்வராஜன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

புதுவாழ்வு 2 திட்டத்தை அரசின் பல்வேறு துறைகளுடன் எவ்வாறு இணைந்து செயல்படுத்துவது, அதற்கான வழிமுறைகள், சாத்தியக் கூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டு, செயல் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை, வருவாய் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தோட்டக்கலைத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, வேலைவாய்ப்புத் துறை உள்பட சுமார் 26 அரசுத் துறைகளின் அலுவலர்கள் கலந்த கொண்டு, தங்கள் துறைவாரியான பணி விவரங்களையும், புதிய திட்டத்துடன் இணைந்து செயல் படுவதற்கான ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

மேலும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி இணைப்பைத் துரிதப்படுத்த வேண்டுமெனவும், தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானப் பணிகளை விரைந்து முடிக்குமாறும் அறிவுரை வழங்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு முன்னதாக புதுவாழ்வு திட்டம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் இயக்கத்தின் கீழ் செயல்படும் கொன்னையார் மற்றும் செல்லப்பம்பட்டி ஆகிய கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளையும், எலச்சிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அகரம் ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் துவக்கப்பட்டுள்ள மகளிருக்கான கொத்தனார் பயிற்சியினையும் புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் அவர்கள் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கவிதா, மகளிர் திட்ட அலுவலர் திரு. திருவரங்கம், முன்னோடி வங்கி மேலாளர், புதுவாழ்வு திட்டம் செயல்படும் நாமக்கல், கடலூர், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் மாவட்ட புதுவாழ்வு திட் மேலாளர்கள் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

வாழ்வாதாரம் தந்த திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம், பெத்ததாளப்பள்ளி ஊராட்சியில் வசித்து வரும் திருமதி. தானம்மாள், கடந்த 16 வருடங்களாக மல்லிகை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராகவும், ஊக்குனராகவும் இருந்து வருகிறார். சுயமாக தொழில் தொடங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும், அதற்கான முதலீடு இல்லாமல் தானம்மாள் இருந்தார். இந்நிலையில் இவர் உறுப்பினராக இருந்த குழு பெத்ததாளப்பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைக்கப்பட்டது. அந்தக் கூட்டமைப்பின் தலைவராக தானம்மாள் நியமிக்கப்பட்டார்.

மேற்படி கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூபாய் 10 இலட்சம் வழங்கப்பட்டது. அந்தத் தொகையில் தானம்மாள் ரூபாய் 35 ஆயிரம் கடனாகப் பெற்றார். தனது சேமிப்புத் தொகை ரூபாய் 17 ஆயிரம் சேர்த்து மொத்தம் ரூபாய் 52 ஆயிரம் முதலீட்டில் தனது கிராமத்தில் மளிகைக் கடை ஒன்றை ஆரம்பித்தார்.

தற்போது அந்த மளிகைக் கடையில் நாளொன்றுக்கு ரூபாய் 750/- முதல் ரூபாய் 1000/- வரை விற்பனை ஆகிறது. கடையின் மூலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வரும் தானம்மாள், வங்கிக் கடனையும் தவறாமல் திரும்ப செலுத்தி வருகிறார். தனக்கு வழிகாட்டியாக இருந்து தனது வாழ்வாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. தானம்மாள். ■

கிருஷ்ணகிரி மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டம்

பொருளாதார முன்னேற்றம்

தஞ்சாவூர் மாவட்டம், நரசநாயகபுரம் ஊராட்சியில் வசித்து வருபவர் திருமதி. ராஜேஸ்வரி. இவரின் கணவர் எதிர்பாராமல் திடீரென்று மரணமடைந்து விட்டதால், இரண்டு பெண் குழந்தைகளுடன் தனது எதிர்காலம் குறித்து மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இந்நிலையில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் அமைக்கப்பட்ட நரசநாயகபுரம் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் தனிநபர் கடனாகப் பெற்று 10,000/- ரூபாயினை மூலதனமாகக் கொண்டு, மாவு அரைக்கும் இயந்திரங்கள் வாங்கி மாவு அரைத்து விற்கும் தொழிலைத் துவக்கினார்.

தற்போது ராஜேஸ்வரி மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருதுடன், கடனையும் திரும்பச் செலுத்தி வருகிறார். தனது இரண்டு பெண் குழந்தைகளையும் படிக்க வைத்து வருகிறார். தனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் ராஜேஸ்வரி. ■

காய்கறி கடை தந்த வளர்ச்சி

விருதுநகர் மாவட்டம், வச்சக்காரப்பட்டி ஊராட்சியில் மதுரை மீனாட்சி மகளிர் சுய உதவிக் குழு வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவிற்கு சுழல் நிதி, பொருளாதாரக் கடன் மற்றும் நேரடிக் கடன் என மொத்தம் ரூ. 9 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி இக்குழுவினர் வச்சக்காரப்பட்டி ஆர். ஆர். நகர் பகுதியில் உள்ள பூமாலை வணிக வளாகத்தில் காய்கறிக் கடை நடத்தி வருகின்றனர். இக்கடைக்குத் தேவையான காய்கறிகளை அப்பகுதியில் உள்ள விவசாயிகள் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் இருந்து மொத்த விலைக்கு வாங்கி, சில்லரையாக நாள் ஒன்றிற்கு ரூ. 8000/- வரை விற்பனை செய்யப்படுகிறது. குழுவினைச் சேர்ந்த 4 பெண்கள் இக்கடையில் பணிபுரிகின்றனர். அவர்களுக்கு நாள் ஒன்றிற்கு ரூ. 150/- ஊதியமாக வழங்கப்படுகிறது. அனைத்து செலவினங்களும் போக மாதம் ஒன்றிற்கு ரூ. 31,000/- வரை இலாபம் கிடைக்கிறது.

தங்களுக்கு வழிகாட்டியாக இருந்து வாழ்வில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி தந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர் மீனாட்சி மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள். ■

விருதுநகர் மாவட்டம்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

நிதி உள்ளாக்கம் (Financial Inclusion) மற்றும் நிதி கல்வி (Financial Literacy)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

நிதி உள்ளாக்கம் என்றால் என்ன என்பதையும் மற்றும் எவ்வாறு படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் சென்ற இதழில் பார்த்தோம். இந்த இதழில் அதன் தொடர்ச்சியினைப் பார்ப்போம்...

மகளிர் சுய உதவிக் குழுக்கள்

1990–91ஆம் ஆண்டுகளில், இந்தியாவிலேயே முதன் முதலாக நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியுதவியுடன் சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்படுத்தியது. பின்னர் இத்திட்டம், சேலம், தென்னாற்காடு (கடலூர் மற்றும் விழுப்புரம்), மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு, பிறகு தமிழ்நாடு முழுவதும் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பின்னர் மத்திய அரசு, நபார்ட் (NABARD) மூலம் 1992ல் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் வங்கிக் கடன் இணைப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அதன்பின் மற்ற மாநிலங்களிலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது.

1999ல் பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் (SGSY) தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இதில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார மானியம் மற்றும் வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு வருமானம் ஈட்டக் கூடிய தொழில்கள் தொடங்க ஊக்குவிக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டில் நிதி உள்ளாக்கம் (Financial Inclusion) என்ற வார்த்தை மத்திய ரிசர்வ் வங்கி (RBI) ஆளுநரால் (Governor) உபயோகிக்கப்பட்டு, இன்று உலக அளவில் பேசப்பட்டு வருகின்றது. 2005–2006ஆம் ஆண்டுகளில் மத்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தலின்படி வங்கியில் சேமிப்புக் கணக்கு துவக்குவதில் உள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி, குறைந்த அளவு அல்லது பணமே இல்லாத கணக்குகளை (No Frill Account) ஏழை எளிய மக்களும் வங்கிக் கணக்கு துவக்க வழிவகை செய்தது.

மேலும் 2006ஆம் ஆண்டில் வங்கி கிளைகள் அல்லாத கிராமங்களில் வங்கி சேவை கிடைத்திட, வங்கி வணிக ஒருங்கிணைப்பாளர்கள் (Business Fecilitator) மற்றும் வங்கித் தொடர்பாளர்கள் (Business Coraspondents) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

வங்கிக் கிளைகள் இல்லாத கிராம மக்கள் வங்கி சேவைகளை பயன்படுதத வேண்டுமென்றால் அருகிலுள்ள / தொலைவில் உள்ள நகரத்தில் உள்ள வங்கிகளுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இதனால் வங்கிக்குச் சென்று வர பண செலவு, கால தாமதம், அன்றைய வருமானம் (கூலி) இழப்பு போன்ற இன்னல்களை சந்திக்க வேண்டியிருந்தது. இதை அறிந்த அரசு வங்கிக் கிளைகள் இல்லாத கிராமப்புற மக்களுக்கு, அவர்கள் வீட்டருகிலேயே குறைந்தபட்ச வங்கிக் சேவைகள், அதாவது சேமிப்புக் கணக்குகள் துவங்குவதற்கும், அந்த கணக்குகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு ரூ. 50/– முதல் ரூ. 2000/– வரை பண பரிவர்த்தனைகள் செய்து கொள்வதற்கும், வயதானவர்கள் ஓய்வூதியம் அவர்கள் வீட்டருகிலேயே பெற்றுக் கொள்வதற்கும், படித்த இளைஞர்களை நியமித்து, அவர்கள் மூலம் வங்கி சேவைகள் கிராமப்புறங்களில் கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இத்திட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைத்ததில் நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவிக் குழுவை சேர்ந்த 3187 தோழிகள் வங்கித் தொடர்பாளர்களாக பல்வேறு வங்கிகளில் பணிபுரிந்து வருகின்றனர். வங்கிக் கிளைகளில் காலை 10 மணி முதல் மாலை 3 – 4 மணி வரைதான் பண பரிவர்த்தனைகள் நடைபெறும். வங்கி வணிக தொடர்பாளர்கள் அந்தந்த கிராமங்களில் (அ) பக்கத்து கிராமங்களில் வசிப்பதால் அவர்களால், காலை முதல் மாலை வரை வங்கிச் சேவைகளை வழங்க முடிகிறது. மேலும், வங்கிச் சேவைகள் மற்றும் அரசின் நலத் திட்ட உதவிகள் நேரிடையாக மக்களுக்குச் சென்றடைய ‘ஒரு வீடு ஒரு கணக்கு’ என்ற திட்டத்தின் மூலம் குறைந்த பட்சம் ஒரு குடும்பத்திற்கு ஒரு வங்கிக் கணக்கு துவக்கப்பட்டுள்ளது.

இவ்வகை சேவைகளை மக்கள் அறிந்து கொள்ளவும், அந்த சேவைகளை பயன்படுத்திக் கொள்ளவும், வங்கி கிளைகள் மூலமும் மற்றும் மாவட்டந்தோறும் நிதி கல்வி மையங்கள் (Financial Literacy Counseling Centres) அமைத்து, ஓய்வு பெற்ற வங்கி மேலாளர்கள் மூலம் கிராமங்களுக்கு சென்று கூட்டங்கள் வாயிலாகவும் நிதி கல்வியை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மத்திய ரிசர்வ் வங்கி சுவரொட்டிகள் (Posters) மூலம் கிராமப்புற மக்கள் இலகுவாக புரிந்து கொள்ளும் முறையிலும், சிறு கதைகள் மூலமும், நிதி கல்வியை கிராமப்புற மக்களுக்கு எடுத்துரைத்து வருகின்றது. ■

(தொடரும்)

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

சுகாதார அணுகுமுறைகள் பற்றிய பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம் சுகாதார அணுகுமுறைகள் பற்றிய பயிற்றுநர்கள் மற்றும் ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியானது, 14.11.2016 முதல் 16.11.2016 வரை மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் வெற்றிகரமாக நிறைவேறியது.

பயிற்றுநர்கள் தங்கள் களப் பணியில் ஏற்படுத்தியுள்ள முன்னேற்றம் பற்றிய 'சுய திறனாய்வு' அடிப்படையில் வகுப்புகள் எடுக்கப்பட்டன. பயிற்சியின் போது ஊக்குநர்கள் எவ்வாறு களப் பணியில் தூண்டுதல் செயல்முறை விளக்கம் மற்றும் சாலை பின்தொடர்பு செய்கிறார்கள் என்பது பரிசோதிக்கப்பட்டது.

மேலே கூறப்பட்ட இரண்டு அம்சங்களிலும் பயிற்சியாளர்கள் / ஊக்குநர்கள் எவ்வாறு செயல்பட்டனர் என்று திரு. அஜய் சின்கா அவர்கள் இறுதியில் திறனாய்வு மேற்கொண்டார்.

பயிற்சியின் நிறைவு விழாவில், இதுவரை இல்லாத அளவிற்கு மிகப்பெரிய நிறைவு விழா நடைபெற்றது.

சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்ட பிற துறைத் தலைவர்களின் பங்கேற்புடன், திருமதி. சாந்தஷீலா நாயர் (OSD), மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நீடித்த மற்றும் நிலையான சுகாதாரத்தை அடைய எந்த குறைபாடுகளை நாம் களைய வேண்டும் என்று OSD அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இறுதியில், பயிற்சியில் பங்கேற்ற ஊக்குநர்கள் / பயிற்சியாளர்கள், தாங்கள் களப்பணியில் சந்திக்கும் சவால்களை பகிர்ந்து கொண்டு, அவற்றை சரி செய்ய வேண்டுகோளையும் விடுத்தனர்.

சாதனை படைத்த காரணப்பட்டு ஜெயா

அனுப்புநர்
காரணப்பட்டு ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பு
கடலூர்.

பெறுநர்
இயக்குநர் அவர்கள்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை

ஐயா,

வணக்கம். ஜெயா ஆகிய நான் அதிகம் படிக்காதவளாக இருந்தாலும், கழிப்பறை இல்லாததால் பெண்கள் படும் துன்பத்தை அனுபவப்பூர்வமாக உணர்ந்திருந்தேன். காரணப்பட்டு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பில் செயலாளராகப் பணியாற்றி வந்த என்னை காரணப்பட்டு ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் ஊக்குவிப்பாளராக தேர்வு செய்தார்கள். 2013 மே மாதம் என்னிடம் தூய்மை பாரத இயக்கத்தின் முதன்மைப் பதிவேட்டை ஒப்படைத்து, ஒருநாள் பயிற்சி அளித்தார்கள். அந்தப் பயிற்சியில் திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், கூடுதல் இயக்குநர் (ஊராட்சிகள்), செயடற்பொறியாளர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பணி மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களின் முன்னிலையில் பயிற்சி அளித்தார்கள். இதை எப்படி நடத்த வேண்டுமென தெளிவாகப் பயிற்சி அளித்தார்கள்.

காரணப்பட்டு கிராமத்தில் வசிக்கும் சுய உதவிக் குழுப் பெண்களுக்கு நான் பயிற்சி அளித்தேன். ஒவ்வொரு குழுவிலும் உள்ள உறுப்பினரிடம் ரூ. 2000/– பெற்று, தூக்கணாம்பாக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் முன் பணம் செலுத்தி, ஒரு வீடு விடாமல் கழிவறை கட்டிக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. பிறகு காரணப்பட்டு கிராமத்தில் எத்தனை குடும்பங்கள் உள்ளன என கணக்கெடுக்கப்பட்டதில், 330 குடும்பங்கள் உள்ளன என்றும், அதில் 56 குடும்பங்கள் ஊரில் இல்லை என்றும், 10 குடும்பங்களில் கழிவறை வசதி இருந்தது என்றும், 264 குடும்பங்களில் கழிவறை இல்லை என்றும் கணக்கெடுக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு குழு உறுப்பினர்களை மூன்று தரமாக பிரிக்கப்பட்டது. கழிவறை கட்ட முடிந்தவர்கள் (நடுத்தர வர்க்கம்) அவர்களே கட்டிக் கொண்டார்கள். கழிவறை கட்ட முடியாதவர்களுக்கு குழு உறுப்பினர்களான 30 பெண்கள் சேர்ந்து, எங்கள் கிராமத்தில் உள்ள ஆற்றில் இருந்து கூடையில் மணல் எடுத்து வந்தும், சூளையிலிருந்து கல் எடுத்து வந்தும் கொடுத்தார்கள். ஆனால் ஆண்கள் மது அருந்தி விட்டு கட்டுமானப் பொருட்களையும், கட்டிய கழிவறைகளையும் உடைத்து விட்டார்கள். அதையும் பொருட்படுத்தாமல், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் கடனை வாங்கி கழிவறை கட்டிக் கொடுத்தோம். ஒரு குடும்பம் கூட வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு கழிவறை கட்டிய பில் கேட்டு வந்ததில்லை. இவை அனைத்துப் பணிகளையும் குழு உறுப்பினர்களே பார்த்துக் கொண்டார்கள். இவர்கள் கழிவறை கட்டும் பணிகளில் ஈடுபட்டு, கடுமையாக உழைத்ததற்காக தூக்கணாம்பாக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பொருளாதாரக் கடன் வாங்கி தந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தினோம்.

மேலும் இளைஞர் குழு மூலம் முன்பு ஊர் மக்கள் மலம் கழித்த இடங்களில் மரக் கன்றுகளை நட்டு, இளைஞர்களே பராமரித்து வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைப்படி, பெண்கள் நலன் கருதி தனி நபர் இல்லக் கழிவறைகள் கட்டி பயன்படுத்தி, நோயில்லாமல் வாழ்வதற்கு அரசு அதிகாரிகள் அனைவரும் எங்களுக்காக எங்கள் கூட உழைத்தார்கள். சிலர் உதாசீனப்படுத்தி பேசினார்கள். மாவட்ட ஆட்சியர் அவர்கள், எங்கள் கிராமத்திற்கு 3 முறை வந்த பிறகு, எங்களை தரக்குறைவாக பேசியதை நிறுத்தினார்கள்.

2015 ஆகஸ்ட் மாதம் 23ந் தேதி எங்கள் வேலையைத் தொடங்கினோம். 2015 அக்டோபர் மாதம் 2ந் தேதி காந்தி ஜெயந்தி அன்று மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் கிராம சபையில் தூய்மை கிராமம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜெயாவாகிய நான், பிறந்ததிற்கான அர்த்தம் அன்றுதான் புரிந்தது. என்னாலும் அரசாங்கத்தோடு சேர்ந்த மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்த புண்ணியம் எனக்குக் கிடைத்ததில் பெருமகிழ்ச்சி அடைந்தேன்.

சொந்தமாகக் கழிவறை அவர்களே கட்டியது	–	10
நிர்மல் பாரத் அபியான் மூலம் கட்டப்பட்டது	–	49
கூட்டமைப்பு மூலம் கட்டப்பட்டது	–	215

மொத்தம்		271

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் கட்டப்பட்டது	–	163
வங்கியில் கடன் வாங்கி (குடும்பத்தினரால்) கட்டப்பட்டது	–	37
BLESS தொண்டு நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்டது	–	15
சொந்தமாக கழிவறை அவர்களே கட்டிக் கொண்டது	–	10
நிர்மல் பாரத் அபியான் மூலம் கட்டப்பட்டது	–	49

மொத்தம்		274

காரணப்பட்டு ஊராட்சி

வ.எண்.	இனம்	ஆண்கள்	பெண்கள்
1	OC	2	3
2	BC	80	76
3	MBC	39	34

காரணப்பட்டு ஊராட்சி காலனிப் பகுதி

வ.எண்.	இனம்	ஆண்கள்	பெண்கள்
1	SC	234	244
2	MBC	77	80
3	MBC	140	164

ஆண்கள் 572 பேர் பெண்கள் 601 பேர்

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து வேலைகளும் ஊக்குவிப்பாளர் ஜெயாவாகிய என் முயற்சியினால் நடைபெற்றது. இதனால், என்னை காரணப்பட்டு ஜெயா என்று இதுவரை அழைத்து வந்த மக்கள், நான் இந்த கழிவறைகளை காரணப்பட்டு கிராமத்தில் கட்டி முடித்த பிறகு 'Toilet ஜெயா' என்று தான் அழைத்து வருகிறார்கள். இது எனக்கு மகிழ்ச்சிதான். நான் பிறந்த வளர்ந்த ஊரில் மக்கள் அனைவரும் நோயில்லாமல் வாழ்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், தூக்கணாம்பாக்கம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மேலாளல் அவர்களுக்கும், அரசு அதிகாரிகள் அனைவருக்கும் என்னை மேலும் மாநில பயிற்றுநராக உருவாக்கிய அரசு அதிகாரிகள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். ■

தமிழ்நாட்டில் வெற்றிகரமாக செயல்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்த முடிவு

DAILY THANTHI NEXT - 4-11-

TN rural waste disposal system to be role model for other states

KOCHI: Hailing the Tamil Nadu model of solid and liquid waste management system, the Centre on Thursday said it would take steps to "replicate" the state's successful initiative in rural habitations across the country.

Union Minister of Rural Development, Panchayati Raj and Drinking Water and Sanitation Narendra Singh Tomar said this at a press conference held on the sidelines of the BRICS Conference on Participatory Local Budgeting here. The minister said around 9,000 villages in Tamil Nadu had successfully implemented the solid waste management system based on the 'waste to wealth' concept.

The revenue generation model of Tamil Nadu would help generate additional income for Gram Panchayats under the National Rural Livelihoods Mission, which also ensures additional income to people in rural areas, he said. "Our effort is to replicate Tamil Nadu model at other places," said Tomar.

தென்னகத்தில் வெற்றிகரமாக செயல்படும் DINAKARAN - 4·11·2016

திடக்கழிவு மேலாண்மை திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்த முடிவு

மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் தகவல்

கொச்சி, நவ.4: தமிழகத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்துள்ளார்.

கொச்சியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் நரேந்திர சிங் தோமர் கூறியதாவது:

தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுகிறது. குப்பை கழிவுகளை உபயோகமான முறையில் பயன்படுத்தி தமிழகத்தில் மட்டும் சுமார் 9,000 கிராமங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டம் மூலம் கிராம பஞ்சாயத்துக்களுக்கு கூடுதல் வருமானம் கிடைக்கிறது.

எனவே திடக்கழிவு மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்டத்தை நாடு முழுவதும் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழகத்தில் சிறப்பாக செயல்படும் இந்த திட்டத்தை நாட்டில் பிறபகுதிகளிலும் விரைவில் செயல்படுத்துவோம். மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி மற்றும் மாநில அரசு ஒதுக்கீடு செய்யும் நிதியை கொண்டு திடக்கழிவுகள் உரமாக மாற்றப்படுகிறது.

இதன் மூலம் பிரதமரின் சுத்தமான இந்தியா திட்டம் கிராமங்களில் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. சுற்றுச்சூழலுக்கு மிக ஆபத்தாக இருந்த கழிவுகள் சரியான முறையில் பயன்படுத்தமுடிகிறது.

இவ்வாறு தோமர் கூறினார்.

நாட்டில் உள்ள கிராமப்புறங்களில் நாள் ஒன்றுக்கு 18,000 மில்லியன் லிட்டர் கழிவுநீரும், மறுசுழற்சி செய்யக்கூடிய திடக்கழிவுகள் சுமார் 0.4 மில்லியன் மெட்ரிக் டன் அளவுக்கு உருவாவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

DAILY THANTHI NEXT - 4-11-2016

TN rural waste disposal system to be role model for other states

KOCHI: Hailing the Tamil Nadu model of solid and liquid waste management system, the Centre on Thursday said it would take steps to "replicate" the state's successful initiative in rural habitations across the country.

Union Minister of Rural Development, Panchayati Raj and Drinking Water and Sanitation Narendra Singh Tomar said this at a press conference held on the sidelines of the BRICS Conference on Participatory Local Budgeting here. The minister said around 9,000 villages in Tamil Nadu had successfully implemented the solid waste management system based on the 'waste to wealth' concept.

The revenue generation model of Tamil Nadu would help generate additional income for Gram Panchayats under the National Rural Livelihoods Mission, which also ensures additional income to people in rural areas, he said. "Our effort is to replicate Tamil Nadu model at other places," said Tomar.

தமிழக திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை நாடு முழுவதும் பின்பற்ற முடிவு

கொச்சி, நவ. 3: தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை நாடு முழுவதும் கிராமப்புறங்களில் பின்பற்றச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவித்தார்.

கேரள மாநிலம், கொச்சியில் உள்ளாட்சிகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான பிரிக்ஸ் அமைப்பின் கருத்தரங்கு வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற பின் மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டில் சுமார் 9,000 கிராமங்கள் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை, 'குப்பையில் இருந்து செல்வம்' என்ற கருத்துருவாக்கத்தின் அடிப்படையில் வெற்றிகரமாக அமல்படுத்தியுள்ளன. வருவாய் ஈட்டும் இத்திட்டமானது கிராமப் பஞ்சாயத்துகளுக்கு கூடுதல் வருவாய் ஈட்ட உதவும். மேலும், கிராமப்புறங்களில் உள்ள மக்கள் கூடுதல் வருவாய் பெறுவதையும் இது உறுதிப்படுத்துகிறது.

மத்திய அரசின் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், தூய்மை இந்தியா திட்டம் ஆகியவற்றின் கீழ் ஒதுக்கப்படும் நிதியும், மாநில அரசு ஒதுக்கும் நிதியும் தமிழகத்தில் திடக் கழிவுகளை உரமாகவும் மற்ற வகைப் பொருள்களாகவும் மாற்றுவதற்குப் பயன்படுத்தப் படுகின்றன.

இந்நிலையில், நாட்டின் மற்ற பகுதிகளிலும் இத்திட்டத்தைப் பின்பற்றச் செய்ய மத்திய அரசு முயற்சி மேற்கொள்ளும். நாடு முழுவதும் திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மைத் திட்டத்தை திறம்பட அமல்படுத்துவது என்பது பிரதமர் நரேந்திர மோடியின் தூய்மை இந்தியா திட்டம் வெற்றி பெறுவதற்கு அவசியமாகும் என்றார் தோமர்.

மேற்கண்ட கருத்தரங்கில் பங்கேற்ற அதிகாரிகள் கூறுகையில், 'தமிழகத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துகள், குப்பைகளைப் பிரித்த பின் உயிரிக் கழிவுகளில் இருந்து உரங்களைத் தயாரிக்கின்றன' என்று தெரிவித்தனர்.

இந்தியாவின் கிராமப்புறங்களில் பொதுமக்களின் சுகாதாரத்துக்கும், தூய்மைக்கும் கழிவுப் பொருள்கள் பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக யுனிசெஃப் உள்ளிட்ட பல் வேறு அமைப்புகளின் ஆய்வுகள் சுட்டிக்காட்டின. அதைத் தொடர்ந்து, தமிழக மாதிரியை நாடு முழுவதும் பின்பற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

DECCAN CHRONICLE - 4·11·2016

TN WASTE MGMT TO BE REPLICATED IN RURAL AREAS

Kochi, Nov. 3: Hailing the Tamil Nadu model of solid and liquid waste management system, the Centre Thursday said it would take steps to "replicate" the southern state's successful initiative in rural habitations across the country.

Union Minister of Rural Development, Panchayati Raj and Drinking Water and Sanitation, Narendra Singh Tomar said this at a press conference held on the sidelines of the BRICS Conference on Participatory Local Budgeting here.

The minister said around 9,000 villages in Tamil Nadu had successfully implemented the solid waste management system based on the "waste to wealth" concept.

The revenue generation model of Tamil Nadu would help generate additional income for Gram Panchayats under the National Rural Livelihoods Mission, which also ensures additional income to people in rural areas, he said.

"Our effort is to replicate Tamil Nadu model at other places," said Tomar. He said villages in Tamil Nadu used funds allocated from Centre's Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme, Clean India Mission and funds provided by the state government for converting solid waste to fertilisers and other wealth.

Tomar said implementation of effective solid and liquid waste management system in villages across the country is a key to the success of Prime Minister Narendra Modi's ambitious Clean India Mission.

—PTI

● Move comes in the wake of various studies by agencies like UNICEF, which have pointed out that waste is a severe threat to the public health concern

THE TIMES OF INDIA - 4·11·2016

Centre to replicate TN waste mgmt model

Kochi: Hailing the Tamil Nadu model of solid and liquid waste management system, the Centre on Thursday said it would take steps to "replicate" the state's successful initiative in rural habitations across the country.

Union minister of rural development, panchayati raj and drinking water and sanitation, Narendra Singh Tomar said this at a press conference held on the sidelines of the BRICS Conference on Participatory Local Budgeting here.

The minister said around 9,000 villages in Tamil Nadu had successfully implemented the solid waste management system based on the "waste to wealth" concept.

The revenue generation model of Tamil Nadu would help generate additional income for Gram Panchayats under the National Rural Livelihoods Mission, which also ensures additional income to people in rural areas, he said.

"Our effort is to replicate Tamil Nadu model at other places," said Tomar.

He said villages in Tamil Nadu used funds allocated from Centre's Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme, Clean India Mission and funds provided by the state government for converting solid waste to fertilisers and other wealth.

He said implementation of effective solid and liquid waste management system in villages across the country is a key to the success of PM Narendra Modi's ambitious Clean India Mission. Ministry officials attending the conference said Gram Panchayats in Tamil Nadu produce fertilisers from bio waste after segregating waste at community level.

The villages have raised a lot of money from waste management, making it a successful source of revenue for them. PTI

மகளிர் மாநாடு

முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம் இயக்கத்தில் திட்டமிடல், செயல் படுத்துதல் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றில் பெண்களின் பங்கேற்பு மிகப் பெரிய அளவில் உள்ளது. அடிமட்டத்தில் இருந்து மாவட்ட அளவிலும் பெண்கள் சுகாதார ஊக்குவிப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

இவர்களுடைய செயல்பாட்டை சிறப்பிக்கும் வண்ணம் புதுதில்லியில் 09.11.2016 அன்று பெண்கள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பாலின சமத்துவம், மாதவிடாய் காலத்தில் மேற்கொள்ளப்படும் சுகாதார அணுகுமுறைகள், வளர் இளம் பெண்கள் சந்திக்கும் இடர்பாடுகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளி பெண்கள் சம்மந்தப்பட்டவை விவாதம் செய்யப்பட்டன.

மிகச்சிறப்பாக நடந்தேறிய இந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் இருந்து 10 நபர்கள் பங்கெடுத்து கொண்டனர். இவர்களின் விவரம் பின்வருமாறு.

மண்புழு உரமாக்கல் பயிற்சி

மண்புழு உரமாக்கலுக்கான பயிற்சி 03.11.2016 அன்று ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது. மண்புழு உரமாக்கர் நுட்பத்தில் வல்லுநரான டாக்டர். சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்கள் பங்கேற்பாளர்களுக்கு மண்புழு உரமாக்கலின் நுட்பத்தை விளக்கிக் கூறினார். மாவட்டத்திலிருந்து நான்கு உதவிப் பொறியாளர்கள் மற்றும் நான்கு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இந்தப் பயிற்சியானது வகுப்பறை பாடம் மற்றும் மண்புழு உரமாக்கல் மாதிரி விளக்கம் என இரண்டு பிரிவாக நடத்தப்பட்டது.

வகுப்பறை பாடத்தில் மண் வளம், சூழ்நிலையியலின் முக்கியத்துவம், ம ண்புழு வகைகள், மண்புழு உரமாக்களின் வகைகள் போன்றவை தெளிவாக விளக்கப்பட்டன. இரண்டாவது பிரிவில் மண்புழு உரமாக்கல் விதத்தை மாதிரி செயல் முறையாக தெளிவாக விளக்கப்பட்டது.

இறுதியில் பயிற்சியாளர்களின் கேள்விகளுக்கு எளிமையாக புரியும்படி விளக்கங்களைக் கூறி,ட ாக்டர். சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்கள் பயிற்சியை நிறைவு செய்தார்.

களப்பணியின் குரல்கள்

முழுமையாக கட்டி முடிக்கப்பட்ட
தனிநபர் இல்ல கழிப்பறை.
சொக்கநாதபுரம் பஞ்சாயத்து,
துறையூர் ஒன்றியம்,
திருச்சிராபள்ளி மாவட்டம்
நாள் :4.10.2016.

தூண்டுதல் செயல் முறை விளக்கம் – சமூக ஆர்வலர்கள் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்க முன்வருதல் – கோயம்புத்தூர் மாவட்டம் – நாள் : 5.10.2016.

உலக கைகழுவும் தினத்தை முன்னிட்டு படப்பை ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளியில் மாணவர்களுக்கு கை கழுவும் பயிற்சி அளிக்கப்பட்டது – குன்றதூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம். நாள் : 5.10.2016

ODF பஞ்சாயத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் தனிநபர் கழிப்பறையை சோதனையில் – பீமனந்தல், அரியாகுங்கூர் பஞ்சாயத்து, செங்கம் ஒன்றியம், திருவண்ணாமலை மாவட்டம் – நாள்: 5.10.2016.

சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு அறிவுறுத்தல் மற்றும் மாணவர்கள் உறுதிமொழி எடுத்தல் – திருப்போரூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம் – நாள்:06.10.2016

களப்பணியின் குரல்கள்

சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு அறிவுருத்துதல் – நீலகிரி மாவட்டம் – 6.10.2016

உறிஞ்சு குழியின் காங்கிரீட் வளையம் தயாரிக்கும் இடம் – விழுப்புரம் மாவட்டம் நாள்:19.10.2016

சுகாதாரம் குறித்து பள்ளி மாணவர்களுக்கு அறிவுருத்துதல் – உத்திர மேரூர் ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம் –நாள் : 7.10.2016

சுகாதாரம் காத்திட மாணவர்கள் உறுதிமொழி எடுப்பின் குட்டி கமன்டோ படையின் பேட்சை ஏற்றல் – குமரபாளையம் பஞ்சாயத்து , சுல்தான் பேட்டை ஒன்றியம், கோயம்த்தூர் மாவட்டம் –நாள்: 13.10.2016.

உலக கை கழுவும் நாளை முன்னிட்டு தீர்தனகிரி பஞ்சாயத்து, குறிஞ்சப்பாடி ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுகாதார விழா நடைபெற்றது – நாள்:14.10.2016

களப்பணியின் குரல்கள்

தனிநபர் இல்ல கழிப்பறைக்கான
இடம் குறியீடு செய்தல்.
நீலமலைக்கோட்டைஊராட்சி, ரெட்டியார்
சத்திரம், திண்டுக்கல்மாவட்டம் – 14.10.2016

கிராமவரைபடத்தின் மூலம் திறந்தவெளிமலம்
கழித்தலால்வரும் பாதிப்புகளைவிளக்குதல்–பேத்திநாயக்கன்
பட்டி, பழனிஒன்றியம், திண்டுக்கல்மாவட்டம் – நாள்: 15.10.2016

கடலூர் மாவட்டஆட்சியர் தூய்மையானமற்றும் பசுமைய
ானகடலூரைஉருவாக்கசுகாதாரநிகழ்ச்சியைதொடங்கி
வைத்தார் – குறிஞ்சிபாடி ஒன்றிம், கடலூர் மாவட்டம்
–நாள் : 16.10.2016

சிமெண்ட் கற்கள்உற்பத்திசெய்யும் இடம்
புதிதாகதொடங்கியது. மனச்சநல்லூர் ஒன்றியம்,
திருச்சிராப்பள்ளிமாவட்டம் –நாள்: 16.10.2016.

சுமூகவரைபடம் வரைந்துதிறந்தவெளிமலம் கழித்தலின்
தீமைகளைமக்களிடம் எடுத்துரைத்தல் – இடம்
அமைந்தராயன் கோட்டைபஞ்சாயத்து, ரெட்டியார் சத்திரம்
ஒன்றியம் திண்டுக்கல்மாவட்டம் – நாள்:16.10.2016

களப்பணியின் குரல்கள்

இடவசதி இல்லாத பயனாளி, வீட்டிற்குள் தனிநபர் இல்லகழிப்பறைகட்டசம்மதித்தார். இது நமதுஊக்குநர்களின் அபராதமுயற்சியால்ஏற்பட்டதாகும்.இடம் –சிதம்பரம்பட்டி, கயத்தாருஒன்றியம், தூத்துக்குடிமாவட்டம்.

சுமூகசுகாதார அணுகுமுறைமற்றும் சுகாதாரம் குறித்த திறன் வளர்ப்பு பயிற்சிக்கு – திட்டஇயக்குநரால்துவக்கி வைக்கப்பட்டது.இடம் –திருநெல்வேலிமாவட்டம் நாள்: 17.10.2016

ஊக்குநர்கள்காலை பின் தொடர்ந்து திறந்தவெளிமலம் கழித்தலைதடுக்கின்றனர் – இடம் பண்டகப்பாடி கிராமம், வேப்பந்தட்டைஒன்றியம், பெரம்பலூர் மாவட்டம் –நாள் : 17.10.2016

மக்கள்பங்கேற்று கிராமவரைபடம் வரைதல் –இடம் : மெல்லபிராலி கிராமம் சேரன்மாதேவிஒன்றியம், திருநெல்வேலிமாவட்டம் – நாள்:19.10.2016.

மாவட்டநிர்வாக அலுவலர்கள், களப்பணியாளர்கள், ஆசிரியர்கள்மற்றும் கிராமமக்கள்மாணவர்களுடன் இணைந்துதிறந்தவெளிமலம் கழித்தலற்றநிலையைஉருவாக்கவிழிப்புணர்வுபேரணிநடத்துதல்இடம் :திருச்சிராப்பள்ளி நாள்:19.10.2016

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலர் / திட்ட இயக்குநர்

திரு. எல். ராஜா,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

திருவள்ளூர் மாவட்டசெயல்பாடுகள் கூடுதல் இயக்குநர் ஆய்வு

திருவள்ளூர் மாவட்டத்தில், சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதார் திட்டத்தின் கீழ் செயல்படும் மாவட்ட செயலாக்க அலுவலகம், பகுதி வள மையங்கள், ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்புகள் மற்றும் பழவேற்காடு தென்னிந்திய மீனவர் முன்னேற்ற சங்கத்தினை நேரடி ஆய்வு மற்றும் பார்வையிட, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் 21.10.2016 அன்று வருகை புரிந்தார்.

மாவட்ட செயலாக்க அலுவலகத்தின் கோப்புகளை ஆய்வு செய்ததுடன், மாவட்ட செயலாக்க அலுவலர் மற்றும் மாவட்ட செயலாக்க அலுவலக அலுவலர்களுடன் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் குறித்து கலந்துரையாடினார். சிறுளப்பாக்கம் பகுதி வள மையத்திற்கு சென்று, அங்கு காணப்படும் பதிவேடுகள் மற்றும் வங்கிப் பரிமாற்றங்கள் குறித்து ஆய்வு செய்தார். பின்னர் பழவேற்காடு தென்னிந்திய மீனவர் முன்னேற்ற சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து புதியதாக கட்டப்பட்டுள்ள சிறுளப்பாக்கம் மற்றும் சுண்ணாம்புக் குளம் ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி அளவிலான மகளிர் கூட்டமைப்பு கட்டிடங்களை பார்வையிட்டதுடன், கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு முன்னேற்றத்திற்கான அறிவுரைகளையும், கூட்டமைப்புகள் செயல்பட வேண்டிய வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.

மேலும் கூட்டமைப்பு மக்கள் இத்திட்டத்தின் மூலம் கிடைத்த பல்வேறு திட்டங்களின் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தமைக்குக் காரணமான சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் நன்றி கூறினார்கள்.

ஆய்வின் இறுதியாக கூட்டமைப்புக் கட்டிட வளாகத்தில் திட்டத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் மரக்கன்றுகள் நட்டு, இந்த ஆய்வினை நிறைவு செய்தார். ■

விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படாத குழுக்களை செயல்பட வைக்கும் சிறப்பு முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 5047 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் 3835 சுய உதவிக் குழுக்கள் செயல்பாட்டில் உள்ளன. 1212 சுய உதவிக் குழுக்கள் செயல்பாடின்றி இருப்பதை குழுக்களை தணிக்கை செய்யும் போது அறிய நேர்ந்தது. மேற்கண்ட குழுக்களின் பிரதிநிதிகளை நேரிடையாக சந்தித்து, செயல்பாட்டினை முடுக்கி விடும் நோக்கத்துடன் 12.11.2016 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கூனிமேடு சமுதாய கூடத்தில் திட்ட கூடுதல் இயக்குநர் திரு. எல். ராஜா அவர்களின் தலைமையில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் 8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் உட்பட்ட பல்வேறு சுய உதவிக் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த கலந்தாய்வில் செயல்படாத குழுக்களை உடனடியாக செயல்பட வைக்கும் நோக்கத்துடன், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராகச் செய்து, அதே பெயரில் தொடங்குதல் அல்லது புதிய பெயரை வைத்தல், வங்கி கணக்கை நடைமுறைப்படுத்துதல், உறுப்பினர் சந்தாவினை வங்கியில் செலுத்த நடவடிக்கை எடுத்தல், கூட்டமைப்பின் மேற்பார்வையில் வாரம் ஒருமுறை இக்குழுக்களின் கூட்டம் நடத்துதல், விடுபட்ட பெண்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுவை உருவாக்குதல், வாழ்வாதார நடவடிக்கைக்காக கடனுதவி பெறுதல் போன்ற பணிகளை திட்டம் செயல்படும் மாவட்டங்களில் உடனடியாக மேற்கொள்ள அறிவுரை வழங்கி, இந்த சிறப்பு முகாம் ஒரு புதிய முயற்சியோடு நிறைவு பெற்றது. ■

பயனாளிகளிடம் காப்பீடு பாலிசி பெறுவதற்கான சிறப்பு முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் உள்ள ஆறு கடலோர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பல்வேறு வாழ்வாதாரம் குறித்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. காப்பீடு திட்டத்தின் கீழ் AABY, மருத்துவக் காப்பீடு, கால்நடை காப்பீடு, சொத்துக் காப்பீடு, உடல் நலக் காப்பீடு போன்ற பல்வேறு திட்டங்கள் குறைந்த பிரீமியத் தொகையில் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பிற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை இது புதுப்பித்து, உடனடி தேவைகளுக்கு தொகை திரும்ப பெறப்பட்டு வருகிறது.

இத்திட்டம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு அனைத்து மாவட்டங்களிலும் காப்பீடு குறித்த சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. அதில் குடியிருப்பு மன்றங்களில் உள்ள குழுக்களை ஒருங்கிணைத்து காப்பீட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு அளித்தல், காப்பீடு பற்றிய அவசியத்தை உணர்த்துதல், மனித உயிர்களின் பாதுகாப்பு, நோயினால் ஏற்படும் மனித உழைப்பின் இழப்பை உணர்த்தி, அதற்கான இழப்பீட்டுத் தொகை பெறுதல், பாதுகாப்புத் தன்மை, உடமை, கால்நடைகள் போன்ற வாழ்வாதாரத்தை பாதுகாக்க ஏற்படுத்தப்படும் கூட்டு நுண் காப்பீடு, மிக குறைந்த கட்டணமாக காப்பீட்டுத் திட்டம் வழங்குவதை தெளிவுபடுத்தி PLF-ல் இணைந்த அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களையும் காப்பீட்டில் இணைய வைப்பதே இம்முகாமின் நோக்கமாகும்.

அதன் பின்னர் பல்வேறு சுய உதவிக் குழு உறுப்பினர்கள் காப்பீடு திட்டத்தின் கீழ் இணைந்துள்ளனர் என்பது இம்முகாமின் வெற்றியாகும். ■

பல்லவன் கிராம வங்கி உதவியுடன் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதற்கான சிறப்பு முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் நேரடி கடன் பெற்றிடும் பொருட்டு, பல்லவன் கிராம வங்கியுடன் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வியாபார மேம்பாட்டு முகவராக இணைத்து 08.09.2016 மற்றும் 09.09.2016 ஆகிய இரண்டு நாட்களில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு 179 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடனாக ரூ. 5,37,82,700/- வழங்கப்பட்டுள்ளது.

இதன் வெற்றியைத் தொடர்ந்து, இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் 25.10.2016 மற்றும் 26.10.2016 ஆகிய இரண்டு நாட்கள் நடத்தப்பட்டு, வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டு, உடனடியாக குழுக்களை தர மதிப்பீடு செய்து, குழுவின் சேமிப்பு அடிப்படையில் கடன் தொகை நிர்ணயம் செய்து திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு கீழ்கண்டவாறு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திட்டப் பகுதிகளில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் பயன் பெறுவதுடன் வாழ்வாதாரம் அடைந்துள்ளனர். ■

வ. எண்.	மாவட்டம்	சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை	கடன் வழங்கப்பட்ட தொகை (இலட்சத்தில்
1.	திருவள்ளூர்	11	23.60
2.	காஞ்சிபுரம்	24	96.20
3.	விழுப்புரம்	10	36.20
4.	கடலூர்	38	143.50
	மொத்தம்	83	299.50

கருவாடு மற்றும் கோழித் தீவனம் தயாரித்தல் குறுந்தொழில்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் பழவேற்காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட லைட் ஹவுஸ் குப்பம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினைச் சேர்ந்த திருமலைநகர் பகுதியில் கடந்த 08.05.2013 முதல் கருவாடு மற்றும் கோழித் தீவனம் தயாரிக்கும் குறுந்தொழில் செயல்பட்டு வருகிறது. இத்தொழிலின் பயனாளிகளான திருமதி. ஜெயா மற்றும் திருமதி. மரகதம் ஆகியோர், இத்தொழிலினை சிறந்த முறையில் மேற்கொண்டு, இதுவரையில் ரூ. 20.07.880/- வரை விற்பனை செய்துள்ளனர். பயனாளிகள் தங்கள் வருமானத்தில் பெற்ற தொகையில் ரூ. 6,01.500/- வரை நிகர இலாபமாகப் பெற்றுள்ளனர்.

இத்தொழிலின் பயனாளிகள் தொழிலில் கிடைத்த இலாபத்தின் மூலம் தாங்கள் பெற்ற கடன் தொகைக்கான தவணைக் காலம் 36 மாதங்களுக்கு முன்னதாகவே கடன் தொகை ரூ. 2,50,000/-த்தை முழுவதுமாக கடன் திருப்பம் செய்துள்ளனர். இத்தொழிலின் பயனாளி திருமதி. ஜெயா மற்றும் திருமதி. மரகதம் ஆகியோர், கருவாடு மற்றும் கோழித் தீவனம் தயாரித்தல் தொழிலுக்கான போதிய சந்தை வாய்ப்பு இருந்தும் தொழில் மூலதனத்திற்கான நிதி வசதி இல்லாத நிலையில், வட்டியில்லா கடன் வழங்கி தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்திய, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றியைத் தெரிவித்தனர்.

இந்நிலையில் இத்தொழிலினை தொடர்ந்து செயல்படுத்தவும், புதிய யுத்திகளை கையாளவும், சுகாதாரமான முறையில் நடத்தவும், வரும் நிதியாண்டில் நாபின்ஸ் நிதியுதவியுடன் செயல்படக் கூடிய கூட்டுப் பொறுப்புக் குழுவாக அமைத்து போதுமான பயிற்சியுடன் கூடிய தொழில் கடன் வழங்கினால், இத்தொழிலினை விரிவுபடுத்திடவும், தங்களது வாழ்வாதாரத்தை மேலும் உயர்த்திடவும் ஏதுவாக இருக்கும் என தெரிவித்துள்ளனர். ■

சிறப்பு நிலுவைக் கடன்கள் வசூல் முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் மக்களின் துயரைத் துடைக்கும் வண்ணம், துயர் குறைப்பு நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் மருத்துவ செலவு, வீடு பாதிப்பு, கால்நடை பாதிப்பு போன்ற பல்வேறு இழப்புகளை ஈடு செய்யும் பொருட்டு ரூ. 5,000/– வீதம் 10 மாத தவணைகளில் 6% ஆண்டு வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது.

இக்கடன்களை கட்டத் தவறிய பயனாளிகளிடமிருந்து தவணைத் தொகையை வசூலிக்க மாதத்தின் புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு கடன் வசூல் முகாம் மேற்கொள்ளப்பட்டு, கடன் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இச்சிறப்பு வசூல் முகாம்களின் மூலம் கடந்த மாதம் வசூல் செய்யப்பட்ட நிலுவைத் தொகைகளின் விவரம் பின்வருமாறு

வ.எண்.	மாவட்டம்	வசூல் செய்யப்பட்ட நிலுவைத் தொகை (ரூ.)
1.	திருவள்ளூர்	2,51,000
2.	காஞ்சிபுரம்	6,29,000
3.	விழுப்புரம்	2,80,600
4.	கடலூர்	4,30,212
5.	நாகப்பட்டினம்	1,43,000
6.	கன்னியாகுமரி	1,36,000
	மொத்தம்	18,69,812

அனைத்து தவணை கடந்த கடன்களின் நிலுவைகளும் விரைந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், வசூல் செய்யப்பட்ட கடன் தொகையிலிருந்து கூடுதல் பயனாளிகளுக்கு கடன் வழங்கிட பயனுள்ளதாக அமைகிறது.

சமுதாய பட்டறிவு பயணம் 2016–17, புதுக்கோட்டை மாவட்டம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பெரிய குத்தகை கூட்டு வள மையத்தின் கீழ் செயல் படும் கோடியக்காடு, கோடியக்கரை, புஷ்பவனம் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 50 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் சமுதாய பட்டறிவு பயணமாக 18.10.2016 அன்று காலை 6.00 மணியளவில் புறப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டம், புவரசக்குழி ஊராட்சியில் ஆயத்த ஆடை தயாரிக்கும் நிறுவனத்தைப் பார்வையிட்டனர். இந்த நிறுவனத்தில் 9 தையல் இயந்திரங்களைக் கொண்டு, 20 நபர்கள் சேர்ந்து ஈரோடு, கரூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களிலிருந்து மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நைட்டிகள், ஜாக்கெட் போன்றவற்றை தைத்து, அருகில் உள்ள கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள ஜவுளி கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

அதன் மூலம் ஒவ்வொரு நபரும் மாதம் ரூ. 3,000/– முதல் ரூ. 5,000/– வரை வருவாய் பெருகின்றனர். இதற்கான பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்பட்டு சிறந்த நிர்வாகமாக செயல்பட்டு வருகிறது. குழு உறுப்பினர்களிடையே நல்ல ஒற்றுமையும், உண்மையான செயல்பாடும் உள்ளது என அறிய முடிகிறது.

அதைத் தொடர்ந்து வடகாடு பகுதியில் செயல்பட்டு வரும் காய்கறி உற்பத்தி மற்றும் பூந்தோட்டம் பார்வையிடப்பட்டது. இந்த தோட்டத்தில் விளையும் காய்கறிகள் மற்றும் மலர்கள் அருகில் உள்ள ஊர்களின் சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. காய்கறிகள் மற்றும் மலர்கள் தோட்டம் சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தோட்டத்தின் பொறுப்பாளர்கள் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.

இதன் மூலம் தங்களது பொருளாதாரம் மேம்பாடு அடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர். இடைத் தரகர்கள் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்வதால் இலாபம் முழுவதும் பயனாளிகளுக்கே கிடைக்கிறது எனவும், இத்தொழில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது எனவும், ரூ. 40,000/– முதல் ரூ. 50,000/– வரை இலாபம் ஈட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

இந்தப் பட்டறிவு பயணம் மேற்கொள்ள வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு தங்களது மனமார்ந்த நன்றியினை சமுதாய மக்கள் தெரிவித்துக் கொண்டனர். ■

புதுதில்லியில் நடைபெற்ற கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பழப்பினைகள் மற்றும் அனுபவங்களின் பகிர்வு கருத்தரங்கு

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் இந்தியா மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர்களுக்கான 'கண்காணிப்பு, மதிப்பீட்டு படிப்பினைகள் மற்றும் அனுபவங்களின் பகிர்வுக் கருத்தரங்கு' பன்னாட்டு உணவுக் கொள்கை ஆய்வு நிறுவனம் சார்பில் 04.11.2016 மற்றும் 05.11.2016 ஆகிய தேதிகளில் புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் திரு. சி. எல். செந்தில்குமார் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு மேலாளர், சென்னை), திரு. ஜெயச்செல்வன் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர், நாகப்பட்டினம் மாவட்டம்) மற்றும் திரு. ஜெயச்செல்வன் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர், கன்னியாகுமரி மாவட்டம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கின் முதல் நாளில் வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படை மதிப்பீட்டுக் கணக்கெடுப்பு மற்றும் ஆண்டு திட்ட விளைவு கணக்கெடுப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் கற்றுக் கொண்ட படிப்பினைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் நடைபெற்ற கருத்தங்கில் வளர்ச்சித் திட்டங்களின் இடைக்கால விளைவுகள் மற்றும் திட்ட முடிவு கணக்கெடுப்பு குறித்து பங்கேற்பாளர்களுக்கு விளக்கப்பட்டது.

மேலும் திட்டங்களின் விளைவுகளை கணிப்பதில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுத் துறையின் முக்கியத்துவம் குறித்து, பன்னாட்டு உணவு கொள்கை ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் (இந்தியா) திரு. பி. கே. ஜோஷி அவர்கள் கருத்துரை வழங்கியதோடு இக்கருத்தரங்கு நிறைவு பெற்றது. ■

துயர் குறைப்பு நிதி கடன் வசூல் குறித்த சிறப்பு முகாம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் 2010–2011 முதல் 2016–2017 வரை துயர் குறைப்பு நிதியின் கீழ் அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் துயர் குறைப்பு நிதி கடன் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள கடன் தொகைகளை சிறப்பு முகாம் அமைத்து வசூலிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு, இம்மாதத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. இந்ம சிறப்பு முகாமில் பின்வரும் நடைமுறைகள் செயல் படுத்தப்பட்டது.

மாவட்ட செயலாக்க அலுவலர் முன்னிலையில் மாநில அலுவலகத்தின் மேலாளர் தலைமையில் மாவட்ட அலுவலகத்தில் கூட்டமைப்புகளால் பராமரிக்கப்படும் துயர் குறைப்பு நிதி ரொக்கக் கணக்குப் புத்தகம், வங்கிக் கணக்குப் புத்தகம் மற்றும் கடன் நிலுவைப் பதிவேடு ஆகியவை சரிபார்க்கப்பட்டன. 2010–2011 முதல் 2014–2015 வரை நிலுவையில் உள்ள கடன்களுக்கு மட்டும் உரிய பதிவேடுகளை கூட்டமைப்பு வாரியாக சரிபார்த்து, சமுதாய வளர்ச்சி அலுவலர் / கணக்கு அலுவலர் / மாவட்ட ஒருங்கிணைப்பாளர் / நிறுவன வளர்ச்சி அலுவலர் / கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் ஆகியவர்களை கூட்டமைப்புக்கு ஒருவராக பொறுப்பு நிர்ணயம் செய்து, நிலுவைத் தொகை படிவம் சரிபார்க்கப்பட்டு, மாவட்டச் செயலாக்க அலுவலர் மற்றும் மாநில அலுவலகத்தின் மேலாளரால் இந்த நிலுவைத் தொகை விவரம் இறுதி செய்யப்பட்டது.

மேலும் சிறப்பு முகாம் நடைபெறுவது குறித்து தொகை செலுத்த நிலுவையில் உள்ள கடன்தாரர்களுக்கு முன்கூட்டியே கூட்டு வள மைய பணியாளர்கள் மூலம் தகவல் தெரிவித்து, சிறப்பு முகாம் நாட்களுக்கு முன்னதாகவே நிலுவைத் தொகை செலுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த சிறப்பு முகாமை பயன்படுத்தி நிலுவையில் உள்ள துயர் குறைப்பு நிதி கடன் திருப்பம் செய்யும் பணியை திருப்தி கரமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் 2016

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திட்டப் பகுதிகளில் செயல்பட்டு வரும் மாவட்ட செயலாக்க அலுவலகங்கள், கூட்டு வள மையங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் கடந்த அக்டோபர் 31ஆம் தேதி முதல் நவம்பர் 5ஆம் தேதி வரை ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் 2016 மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கூட்டத்தில் லஞ்சம் ஒழிப்பு குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ■

கலைமகள் மளிகைக் கடை கூட்டுப் பொறுப்புக் குழு, நாகப்பட்டினம்

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னாம்பட்டினம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பினைச் சேர்ந்த சுவேதா மகளிர் சுய உதவிக் குழுவின் அடிப்படை உறுப்பினர் ஆவார். இவரும் மற்றும் திருமதி. கலைச்செல்வி மற்றும் மகளிர் குழுவில் உள்ள திருமதி. எஸ். பானுமதி, திருமதி. ஜி. மகேஸ்வரி, திருமதி. ஆர். புஷ்பா மற்றும் திருமதி. ஜெ. செல்வராணி ஆகியோர் இணைந்து, சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத்துடன் சேர்ந்த மளிகைக் கடை நடத்துவதற்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த 5 நபர்களும் சேர்ந்து ‘கலைமகள் கூட்டுப் பொறுப்புக் குழு’ என்ற பெயரில் வங்கியில் கணக்குத் தொடங்கி, பயனாளிகளின் பங்குத் தொகையாக ரூ. 6,250/– செலுத்தி சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் கடன் தொகையாக ரூ. 1,18,750/– வங்கிக் கணக்கில் வழங்கப்பட்டு, மளிகைக் கடை திறக்கப்பட்டது. தற்பொழுது இதுவரை அசலும் வட்டியும் சேர்த்து ரூ. 80,464/– கடன் திருப்பம் செலுத்தியுள்ளனர்.

கலைமகள் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதால் மாதந்தோறும் 28ஆம் தேதி வங்கியில் கடன் தொகையை செலுத்தி விடுகின்றனர். தற்போது இக்கடன் மூலம் கலைமகள் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து உள்ளது. தங்களின் வீடுகளை புதுப்பித்துள்ளனர். தமது குழந்தைகளை நல்ல முறையில் படிக்க வைத்து வருகின்றனர். முன்பு இருந்ததை விட தற்பொழுது இவர்களின் வாழ்க்கைத் தரமும் பொருளாதாரமும் உயர்ந்துள்ளது.

தங்களுடைய வாழ்க்கையில் விளக்கேற்றிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு, கலைமகள் கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாய் ‘தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்’ இதழ் விளங்கி வருவது உங்கள் அனைவருக்கும் தெரியும். பயனுள்ள கட்டுரைகள், வெற்றிக் கதைகள், பொது அறிவு செய்திகள், மருத்துவம், சமையல் மற்றும் அழகுக் குறிப்புகள் போன்ற அனைத்து அம்சங்களும் கொண்ட முற்றம் இதழிற்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 150/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 300/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 450/–

விளம்பரக் கட்டணங்கள் விபரம்

அட்டையில்	ரூ. 45,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 37,500/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 30,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 30,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 30,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை ‘முற்றம்’ என்ற பெயரில், சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும்.

வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மக்களே முதன்மை

புது வாழ்வு திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் – உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

தமிழ்நாடு அரசின் வறுமை ஒழிப்புத் திட்டங்களின் முன்னோடி திட்டமாக விளங்கும் புதுவாழ்வு திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் 26 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டமானது மக்களே திட்டமிட்டு செயல்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. உலக வங்கியின் துணைத் தலைவர் திரு. பெட்ரோ அல்பா அவர்கள், உலக வங்கியின் புதுவாழ்வு திட்ட செயல் தலைவர் திரு. சமித்தாஸ் அவர்கள் தமது குழுவினருடன், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள படப்பை ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர்.

ஆய்வின் ஒருபகுதியாக தாம்பரத்தில் உள்ள லீனியா பேஷன் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு, வேலைவாய்ப்புக்கு அனுப்பப்பட்டுள்ள இளைஞர்களிடம் உலக வங்கிக் குழுவினர் கலந்துரையாடினர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூர், மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் மற்றும் உத்திரமேரூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் புதுவாழ்வு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 7630 மாற்றுத் திறனாளிகளுக்கும், 6054 நலிவுற்றோருக்கும் பல்வேறு வாழ்வாதார உதவிகள், உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 32,436 இளைஞர்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு சுய தொழில் மற்றும் பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஒரே தொழில் செய்பவர்களை ஒருங்கிணைத்து 323 ஒத்தத் தொழில் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டு, சந்தை இணைப்புகள் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. மகளிரின் சுகாதாரம் மற்றும் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, அவர்களுக்கு மருத்துவ ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 46,447 உறுப்பினர்களுக்கு 117.83 கோடி ரூபாய் கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாதந்தோறும் மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. இம்முகாம்களின் மூலம் 353 மனநலம் குன்றியோர் மற்றும் 141 மனநலம் பாதிக்கப்பட்டோர் கண்டறியப்பட்டு அவர்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. 492 நபர்களுக்கு வாழ்வாதார கடன் உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்த உலக வங்கிக் குழுவினர், 'புதுவாழ்வு திட்டத்தின் செயல் பாடுகளால் கிராமப் பகுதிகளில் உள்ள பெண்கள் சமூகத்தில் பொருளாதார ரீதியாக சிறப்பான அந்தஸ்தை பெற்றுள்ளனர் என்றும், கல்வி, மருத்துவம் மற்றும் ஆண், பெண் பாலின பாகுபாடு போன்றவற்றில் போதிய விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்றும், புதுவாழ்வு திட்டம் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது' என்றும் குறிப்பிட்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில புதுவாழ்வு திட்டத்தின் திட்ட இயக்குநர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் திட்ட இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள், மாநில வல்லுநர் திரு. எம். சக்கரபாணி மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள், களப் பணியாளர்கள் உடனிருந்தனர். ■

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் 30.10.2016 அன்று நடைபெற்ற பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் ஜெயந்தி அரசு விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அப்போது புதுவாழ்வுத் திட்டம் சார்பாக 55 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 53.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில புதுவாழ்வு திட்ட மனிதவள மேம்பாட்டு வல்லுநர், மாவட்ட திட்ட மேலாளர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

கோவை மாவட்டம்

கலந்துரையாடல் கூட்டம்

புதுவாழ்வு திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய திட்டங்களின் அடுத்த நிலை செயல்பாடுகளை திட்டமிடுவதற்கான கலந்துரையாடல் கூட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், மற்றும் கூடுதல் திட்ட இயக்குநர் திரு. பா. செல்வராஜன் அவர்கள் பங்களிப்புடன் 24.10.2016 அன்று கோவை வனக் கல்லூரியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோவை ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மாநகராட்சி ஆணையாளர், மாவட்ட ஊரக வாழ்வதார திட்ட இயக்குநர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

முதலில் வனத்துறை அலுவலர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், பழங் குடியினர் கிராம மக்கள் மூலம் மருத்துவ மூலிகைகள் தோட்டம் அமைத்தல், நாற்றுப் பண்ணை அமைத்தல், சுற்றுப்புற உயிர் சூழல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் மற்றும் வாழ்வாதார செயல்பாடுகள் மேற்கொள்வது குறித்து விவாதிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வங்கிகளின் முதன்மை அலுவலர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில், குழுக்களுக்கு வங்கிக் கடன் தொகைகளை அதிகப்படுத்துதல், வங்கித் தொடர்பாளர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் வாயிலாக குழுக்களை வலுப்படுத்துதல், குழுக்களை தர மதிப்பீடு செய்து வங்கி கடன் பெறுவதற்கான வழிவகை செய்தல், போன்றவை குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

பின்னர் புதுவாழ்வு திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகியவற்றின் அலுவலர்களுடன் சுய உதவிக் குழுக்களின் நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் அவர்கள், குழுக்களின் செயல்பாட்டில் உள்ள பிரச்சனைகள் என்னென்ன என்பது குறித்தும், அவைகளைக் கையாளும் விதம் குறித்தும் கேட்டறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

கோவை மாவட்டத்தில் அமுதசுரபி கடன் நிலுவை அதிகமாக உள்ளதால், அவற்றை உடனடியாக திருப்பம் செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், செயல்படாத குழுக்களை மீண்டும் இயங்க வைக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாநில திட்ட இயக்குநர் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்.

பிறகு மாவட்ட மகமை நிர்வாகிகளுடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில், மகமை அமைப்பினர் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்தும், அதனைத் தொடர்ந்து புதுவாழ்வு திட்ட அலுவலர்களுடனாக கலந்தாய்வுக் கூட்டத்தில் அமுதசுரபி கடன், செயல்படாத குழுக்களை செயல்பட வைத்தல், திறன் வளர்ப்பு பயிற்சி வழிகாட்டி மற்றும் வேலைவாய்ப்பு மையம் ஏற்படுத்துதல், சிறுதொழில் குழுக்களின் செயல்பாடுகளை துரிதப்படுத்துதல், மின் ஆளுமை பொது சேவை மையம் மூலம் சேவைகளை அதிகப்படுத்தி அவற்றை வலுப்படுத்துதல் மற்றும் அவற்றின் வருவாயைப் பெருக்குதல் போன்ற செயல்பாடுகளையும் வலுப்படுத்த வேண்டும் என்றும் கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார். ■

விருதுநகர் மாவட்டம்

முன்னோடி திட்டத்தின் செயல்பாடுகள் பார்வையிடல்

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்டத்திற்கு முன்னோடி திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட உலக வங்கிக் குழுவின் அலுவலர்களான திரு. ஆதர்ஸ், திருமதி. சாருலதா, திரு. யுவராஜ் மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. சாந்தா, இ.ஆ.ப., ஆகியோர் வருகை தந்தனர்.

ஆய்வின் முதற்கட்டமாக வெம்பக்கோட்டை ஒன்றியம், செவல்பட்டி ஊராட்சியில் செயல்பட்டு வரும் மங்கை ஆயத்த ஆடை ஒத்தத் தொழில் குழு, மற்றும் சாத்தூர் ஒன்றியம் வெங்கடாசலபுரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் தனிநபர் தொழில் முனைவோர் ஆயத்த ஆடை நிறுவனம் ஆகியவற்றைப் பார்வையிட்ட உலக வங்கிக் குழுவினர் மற்றும் திட்ட இயக்குநர் அவர்கள், மேற்படி தொழில் குழுக்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினர்.

பின்னர் இக்குழுவினர் சின்ன காமன்பட்டி, ஆலங்குளம், கங்கரக்கோட்டை, எட்டக்காப்பட்டி மற்றும் சாத்தூர் ஆகிய இடங்களுக்கு சென்று புதுவாழ்வு திட்டத்தின் வழிநடத்துதல் மூலம் புதியதாக தொழில் மேற்கொண்டுள்ள நபர்களிடம் கலந்துரையாடி மேலும் சிறப்பாக செயல்பட்டு, தொழில் விரிவாக்கம் செய்திட ஆலோசனைகளை வழங்கினர்.

அதைத் தொடர்ந்து பாண்டியன் கிராம வங்கியின் சேர்மன், மாவட்ட தொழில் மையத்தின் பொது மேலாளர் மற்றும் பொன்னீஸ் நைட்டீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஆகியோரை சந்தித்து, புதுவாழ்வு திட்டத்தின் இரண்டாம் கட்ட திட்ட செயல்பாடுகள் குறித்தும், அதற்கு அந்தந்த துறையின் பங்களிப்பு குறித்தும் விரிவாக பேசப்பட்டது. இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சண்முகராஜ் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உடனிருந்தனர். ■

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

வேலூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை 26.10.2016 அன்று வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு செய்தார். குடியாத்தம் ஊராட்சி ஒன்றியம், வளத்தூர் களப்பகுதி, சிங்கல்பாடி ஊராட்சில் அமைந்துள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குறிப்பாக அமுதா என்ற பெண் தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பறிப்பதை நேரில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் அந்தப் பெண்ணைப் பாராட்டினார். மேலும் தென்னை மரம் ஏறும் இயந்திரத்தைக் கொண்டு நாளொன்றுக்கு 20 மரங்கள் ஏறி தேங்காய் பறிப்பதன் மூலம் தினசரி ரூ. 1000/– வரை வருமானம் கிடைப்பதாக தென்னை மரம் ஏறும் பெண்கள் கூறியதைக் கேட்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள், ‘இலக்கு மக்களின் திறன் வளர்ப்பு அதிகரித்துள்ளதாகவும், பெண்கள் தென்னை மரம் ஏறும் பயிற்சியினைப் பெற்று, சிறப்பாகப் பணி செய்வதாகவும்’ குறிப்பிட்டதுடன், மண்புழு உரம் தயாரிக்கும் புச்சரத்தைப் பார்வையிட்டு, இயற்கை விவசாயத்தை மேம்படுத்திட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கியதுடன், அனங்காநல்லூர் ஊராட்சியிலுள்ள பால் பண்ணையினையும் பார்வையிட்டார்.

இந்த ஆய்வின் போது, வேலூர் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கே. சம்பத்குமார், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. பி. தணிகைவேல், திரு. எஸ். சுபாஷ் சந்திரன், திரு. ஏ. பெரியநாயகம், திரு. எஸ். வில்லியம்ஸ் மற்றும் களப் பணியாளர்கள் உடன் இருந்தனர். ■

வேலூர் மாவட்டம்

புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகள் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி. மு. ஆசியா மரியம், இ.ஆ.ப., அவர்கள் எலச்சிப்பாளையம் மற்றும் மல்லசமுத்திரம் ஆகிய வட்டாரங்களில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் முதற்கட்டமாக தூய்மை பாரத இயக்கத்தின் சார்பாக தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டும் திட்டத்திற்கு கட்டுமான பணிகளை மேற்கொள்ள தேவையான கொத்தனார்களின் பற்றாக்குறையினை தவிர்க்க, ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 30 பெண்கள் வீதம் மொத்தம் 210 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு எலச்சிப்பாளையம் ஒன்றியம், அகரம் ஊராட்சியில் வழங்கப்பட்டு வரும் கொத்தனார் பயிற்சி பார்வையிடப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மல்லசமுத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் டெங்கு விழிப்புணர்வு பேரணியைத் துவக்கி வைத்த மாவட்ட ஆட்சியர் அவர்கள், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் பருத்திப்பள்ளி, கருமனூர் ஆகிய கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார். பின்னர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் வாழ்வாதார கடனுதவியாக 32 உறுப்பினர்களுக்கு ரூபாய் 9.06 இலட்சமும், தனிநபர் கழிப்பறை கட்டுமானப் பணிக்காக 15 பயனாளிகளுக்கு ரூபாய் 1.13 இலட்சமும், மின் ஆளுமைத் திட்டத்தின் மூலம் பயனாளிகளுக்கு சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. கவிதா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், உதவித் திட்ட மேலாளர் திரு. ஆர். சுரேஷ்குமார், எலச்சிப்பாளையம் மற்றும் மல்லசமுத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் புதுவாழ்வு திட்டப் பணியாளர்கள் உடனிருந்தனர். ■

CATS சுகாதாரம் குறித்த பயிற்சி

சேலம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஏற்காடு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சிகளில் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு குடிநீர், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு (WASH) தொடர்பான பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் ஏற்காட்டில் உள்ள 9 ஊராட்சிகளைச் சார்ந்த 50 சமூக சுகாதார தூதுவர்கள் மற்றும் மக்கள் பங்கேற்புடன் சமுதாய அணுகுமுறையில் முழு சுகாதாரம் (CATS) மற்றும் மக்கள் மனமாற்றம் ஏற்பட தூண்டுதல் (Triggering) பயிற்சி வழங்கப்பட்டது. மக்கள் நிலை ஆய்வின் மூலம் கழிவறை இல்லாத வீடுகள் கண்டறியப்பட்டு ஒவ்வொரு சமூகப் பயிற்றுநருக்கும் தனி பொறுப்பினைக் கொடுத்து கழிப்பறை கட்டுவதற்கு ஊக்கப்படுத்தப்பட்டதுடன், கழிப்பறை கட்டுவதற்கான ஸ்மார்ட் கழிப்பறை தொழில் நுட்ப மாதிரிகளும் விளக்கப்பட்டன.

மேலும், 42 பயனாளிகளுக்கு கூட்டமைப்பு நிதியிலிருந்து ஊக்கத் தொகையாக தலா ரூ. 5,000/– வீதம் ரூ. 2.10 இலட்சம் வழங்கப்பட்டது. தற்போது 2 ஊராட்சிகள் திறந்தவெளி மலம் கழிக்காத ஊராட்சிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சியில் சேலம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. தரணி, உதவித் திட்ட மேலாளர் திரு. மணிகண்டன் மற்றும் ஏற்காடு புதுவாழ்வு திட்ட ஒருங்கிணைப்புப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

உட்கட்டமைப்பு பணிகள் ஆய்வு

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள இராங்கியன் விடுதி ஊராட்சியில் புதுவாழ்வு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திட ஊராட்சி நிர்வாகம் சிறப்பாக ஒத்துழைப்பு நல்கியதற்காக உலக வங்கி ரூபாய் 3 இலட்சத் தினை ஊக்க நிதியாக விடுவித்தது. இந்நிதியினைக் கொண்டு ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு. முத்துக்குமார் அவர்கள் ஊராட்சியில் 5 இடங்களில் கூடுதல் தண்ணீர் தொட்டி கட்டியிருந்தார். அதனை புதுக்கோட்டை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. எஸ். வசுமதி. புதுக்கோட்டை மாவட்ட நபார்டு வங்கி மேலாளர் திரு. சோமசுந்தரம் மற்றும் உதவித் திட்ட மேலாளர் திரு. ஆ. செந்தில் முருகன் ஆகியோர் 26.10.2016 அன்று ஆய்வு செய்தனர்.

பின்னர் இந்த ஊராட்சியில் கட்டப்பட்டு கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திடம் ஒப்படைப்பு செய்துள்ள இ–சேவை மையக் கட்டிடத்தை பார்வையிட்டனர். அதைத் தொடர்ந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மகளிர் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியிலிருந்து பொருளாதாரக் கடனாக ரூபாய் 20 இலட்சம் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை இராங்கியன் விடுதி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திரு. முத்துக்குமார், கறம்பக்குடி களப்பகுதி புதுவாழ்வு திட்ட அணித்தலைவர் (பொறுப்பு) திருமதி. எஸ். ஜெகதீஸ்வரி, ஒருங்கிணைப்பாளர்கள் திரு. எம். காளிமுத்து, திருமதி. பி. தேவி மற்றும் திருமதி. பி. ராஜலட்சுமி ஆகியோர் செய்திருந்தனர். ■

கடன் வழங்கும் விழா

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் மற்றும் மாவட்ட வங்கிகள் ஒருங்கிணைப்புக்குழு இணைந்து மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கடன் வழங்கும் நிகழ்ச்சி சங்கரன் கோவிலில் உள்ள DNSRS மஹாலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சே. பாஸ்கரன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. V. M. இராஜலட்சுமி அவர்களும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 150 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனாக ரூ. 3,48,50,500/- வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு. இராமலிங்கம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு. மொகந்தா, ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திருமதி. இராஜ ஜெயபாலா, முன்னோடி வங்கி மேலாளர் திரு. அழகர்சாமி மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருநெல்வேலி மாவட்டம்

மேலும் 08.11.2016 அன்று பாளையங்கோட்டை காதுகேளாதோர் பள்ளியில் நடைபெற்ற விழாவில், திருநெல்வேலி மாவட்டடத்தில் உள்ள 18-45 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் கடன் இணைப்பு முகாமில், புதுவாழ்வு திட்டம் சார்பாக 160 பயனாளிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கலந்து கொண்டு 16 நபர்களுக்கு புதுவாழ்வு திட்ட நிதியில் இருந்து தனிநபர் கடனாக ரூ. 2,80,000/-த்தை வழங்கினார். ■

மாற்றுத் திறனாளிகளுக்கான வரப்பிரசாதம் – ஸ்வலாம்பன் சுகாதார காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் புதுவாழ்வு திட்டமானது ஆற்றல் அளிப்பு மற்றும் வறுமை ஒழிப்பினை இலக்காக வைத்து செயல்பட்டு வருகிறது. இலக்கு மக்களான நலிவுற்றோர், ஏழைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாதார மேம்பாட்டுப் பணிகளாக சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள், தனி நபர் கடன் வழங்கல், திறன் வளர்ப்புப் பயிற்சியினை தொடர்ந்து வேலை வாய்ப்பு, பிற துறை திட்டங்களை இணைத்தல் போன்ற வாய்ப்புகளின் மூலம் புதுவாழ்வு திட்டமானது இலக்கினை எட்டி வருகின்றது.

இதில் புதுவாழ்வு திட்டமானது மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கும் சேவைகளும் அளப்பரியது. அதிலும் குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு தறையில் பல்வேறு வாய்ப்புகளை வழங்கியுள்ளது. தற்போது புதிதாக மாற்றுத் திறனாளிகளுக்கென்றே பிரத்யேகமாக உள்ள ஸ்வாலம்பன் என்ற சுகாதார காப்பீட்டுத் திட்டத்தினை இலக்கு மக்கள் குடும்பத்திற்கு வழங்குகிறது. மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டுத் துறை, சமூக நீதி மற்றும் மேம்பாட்டு அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் வழியாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை புதுவாழ்வு திட்ட மாற்றுத் திறனாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் செய்வதற்காக ஏற்கனவே இத்திட்டம் குறித்த விளக்கங்கள் மாவட்ட திட்ட மேலாளர்கள் மற்றும் உதவித் திட்ட மேலாளர்களுக்கு ஆய்வுக் கூட்டங்களில் விளக்கப்பட்டுள்ளது.

முன்னோட்டமாக வேலூர், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் முறையே 2016 நவம்பர், 09,11 மற்றும் 17 ஆகிய தேதிகளில் மாவட்டத்திற்கு ஒரு வட்டாரம் என்று நடத்தப்பட்டது. மூன்று வட்டாரங்களிலும் இதுவரை ஏராளமான பயனாளிகள் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து புதுவாழ்வு திட்டம் செயல்படும் அனைத்துப் பகுதிகளிலும் இத்திட்டத்தினை கொண்டு சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக புதுவாழ்வு திட்டத்தின் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த மாநில உதவித் திட்ட மேலாளர், மாவட்ட திட்ட மேலாளர்கள், உதவித் திட்ட மேலாளர்கள், மட்கள் கற்றல் மையங்களின் (மகமை) பிரதிநிதிகள், பணியாளர்கள், தி நியூ இந்தியா அஷ்யூரான்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் விடால் ஹெல்த் நிறுவனத் தின் மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு காப்பீட்டுத் திட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் மக்களை இனைத்தனர். இத்திட்டத்தின் பயன் மற்றும் விபரங்கள் குறித்து அடுத்த இதழில் விளக்கமாக வெளியிடப்படும். ■

செம்மறி ஆடுகளில் நோய்த் தடுப்பு முறைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கிராமப்புறங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வரும் கால்நடைகள் வளர்ப்பு, அவைகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்த கட்டுரையின் தொடர்ச்சி...

நீலநாக்கு நோய்

ஆடுகளைத் தாக்கும் இந்நோய் 'க்யூளிகாய்ட்ஸ்' எனப்படும் ஈக்களால் பரவுகிறது. இது செம்மறியாடு, வெள்ளாடு, மாடுகள் மற்றும் மாண்களைத் தாக்க வல்லது. இது 'ஆர்பி' எனப்படும் ஆர்.என்.ஏ. வகை நச்சுக்கிருமிகளால் உண்டாகின்றது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகளில் காய்ச்சலும், இரத்த வெள்ளை அணுக்கள் குறைந்தும், வாயில் புண்களும், தசைகள் வீங்கியும், குளம்பு அடிப்பகுதியில் வீங்கியும் துடிக்கும். வலியுடனும் காணப்படும்.

இந்நோய் கடிக்கும் ஈக்கள் (க்யூளிகாய்ட்ஸ்) மூலம் பரவுகிறது. குறிப்பாக மழைக் காலங்களில் இவ்வகை ஈக்கள் அதிக எண்ணிக்கையில் உற்பத்தியாகும் போது நோய்ப் பெருக்கம் ஏற்படுகிறது. இதுவரை 24 வகை நீலநாக்கு நோய்க்கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன. இதில் சமார் 20 வகை கிருமிகள் நமது நாட்டில் நோய்களை உண்டாக்குகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தக் கிருமிகள், கோமாரி வகை நோய்க்கிருமிகளைப் போல, நோய் எதிர்ப்பில் வேற்றுமையை தோற்றுவிப்பதால், தடுப்பு மருந்து தயாரிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. மேலும் ஒரு கிருமி தாக்கி நோயினின்று மீண்ட ஆடுகள் மறுவகை கிருமியினால் மீண்டும் பாதிக்கப்படக் கூடும். இவ்வாறு 24 வகை கிருமிகளும், ஒரே நோயினை திரும்ப திரும்ப பாதிக்கப்பட்ட ஆடுகளிலேயே ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

எனவே, நோய்த்தடுப்பு மருந்து தயாரிப்பாளர்கள் 24 வகை கிருமிகளையும் ஒருமித்த சேர்த்து தடுப்பு மருந்து தயாரித்தல் அவசியமாகிறது. இல்லையெனில் எந்த வகை கிருமி நோய் உண்டாகிறது என அறிந்து, அந்த வகை கிருமி கொண்டு தயாரிக்கப்பட்ட தடுப்பு மருந்தினைப் பயன்படுத்துதல் நோயினைத் தடுக்கவும், பரவாமல் இருக்கவும் உதவும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள் கருவுற்றிருந்தால், கருச்சிதைவும், பிறக்கும் குட்டிகளில் பிறப்பு குறைபாடுகளும் காணப்படும்.

நமது நாட்டில் ஆடு வளர்ப்பு பொருளாதாரத்தில் இந்நோய் பெரும்பங்கு வகிக்கின்றது. உற்பத்தித் திறனில் பாதிப்பு, கருச்சிதைவு, இறப்பு ஆகியன கணக்கில் கொண்டால் இந்நோயின் மூலம் ஆண்டொன்றிற்கு பல கோடி ரூபாய்கள் நாட்டிற்கு இழப்பு ஏற்படுகிறது.

நோய்க்கான அறிகுறிகளும் – சுவடுகளும்

இந்நோய்க் கிருமிகள் ஆட்டின் உடலினுள் நுழைந்து பின்பு, நோய் ஏற்பட மூன்றிலிருந்து எட்டு நாட்கள் வரை ஆகும். நோயினால் பாதிக்கப்பட்ட ஆடுகள் சோர்ந்தும், காய்ச்சல் 104லிருந்து 105 டிகிரி பாரன்ஹீட் அளவிலும் காணப்படும். 2லிருந்து 3 நாட்களுக்குப் பிறகு, காய்ச்சர் குறையும். பிறகு சுமார் ஒரு வார காலத் திற்கு காய்ச்சல் ஏறியும், இறங்கியும் காணப்படும். நாசியின் வெளிப்புறம் வீங்கியும், இரத்த ஓட்டம் அதிகரித்தும், உதடுகள், வாய்ப்பகுதி மற்றும் நாசியின் உட்பகுதி சவ்வு வீங்கியும், சில நேரங்களில் புண்களுடனும் காணப்படும். பாதிக்கப்பட்ட ஆடுகளில் அதிக அளவில் எச்சில் சுரப்பதுடன், கால்கள் நொண்டியும் காணப்படும். சில நேரங்களில் காதுகள் மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் வீக்கம் காணப்படும்.

இந்நோய்க்கிருமிகள் இரத்த சிகப்பணுக்களையும், இரத்தக் குழாய்களையும் வெகுவாகப் பாதித்து, இரத்தக் கசிவினை ஏற்படுத்தி, வீக்கங்களையும் குறிப்பாக நாக்குப் பகுதியில் இரத்தக் கசிவினையும் ஏற்படுத்தி, அதற்கு நீல நிறத்தை ஏற்படுத்துவதால் இந்த நோய்க்கு நீலநாக்கு நோய் எனப் பெயர். குளம்புகளிலும் இரத்தக் கசிவு ஏற்பட வாய்ப்புண்டு. இதனால் கால்களை ஈடுகள் மாற்றி மாற்றி வைக்கும். மந்தையில் சேராமல் பின்தங்கி, தனித்துக் காணப்படலாம். குளம்புகளில் ஏற்படும் வலி காரணமாக ஆடுகள் கால்களை மடக்கி, முழங்கால்கள் மூலமாகவும் நடக்க வாய்ப்புண்டு.

ஆடுகளின் ரோமம் கையோடு வந்து விடும். நோய் இரண்டு வாரங்கள் வரை காணப்படலாம். மந்தையில் பாதிப்பு 20 சதத்திலிருந்து 80 சதத்தை எட்டலாம் அதேபோல் பாதிக்கப்பட்ட ஆடுகளில் இறப்பு சதவிகிதம் 20லிருந்து 80 சதவீதம் வரை அடையலாம். ஆடுகள் சில நேரங்களில், நோய்க்குறிகள் தீவிரமாக இருக்கும் போது இறந்து விட நேரிடும். நோயினால் பாதிக்கப்பட்ட ஈடுகள், பல்வேறு வகை இரண்டாம் வகை கிருமிகளால் பாதிக்கப்படுகின்றன. நோய்க் கிருமிகளை நோய் எதிர்ப்பு மருந்துகளைக் கொண்டு தீர்க்கலாம். என்ரோசின், நெடுங்கால டெர்ராமைசின், சிப்ரோப்ளாக்ஸாஸின் போன்ற நுண்கிருமி எதிர்ப்பு மருந்துகளை ஊசி மூலமாகவும், புண்களை கிளிசரின் போன்ற களிம்பு கொண்டு மேலே பூசியும், பாதிக்கப்பட்ட ஆடுகளுக்கு எளிதில் சீரணிக்கக் கூடிய கஞ்சி அளித்தும், நோயின் தீவிரத்தைக் குறைத்து, ஆடுகளை நோயினின்று ஆடுகளைக் காப்பாற்றலாம்.

இறந்த ஆடுகளை பிண ஆய்வு செய்யும் போது, வாய்ப்புண்ணும், நாக்கு வீங்கியும், நுரையீரல் பாதிப்பும், இதயத்தின் தசைப் பகுதிகளில் இரத்தக் கசிவும், தசைப் பகுதி சிதைந்தும், நுரையீரல் இரத்தக் குழாயின் அடிப்பகுதியில் இரத்தத் துளிகளும், மகாதமனியின் அடிப்பகுதியில் இரத்தப் புள்ளிகளும் காணப்படும். மேலும் கருச்சிதை அடைந்த குட்டிகளில் உறுப்புகள் சிதைந்தும், குறைபாடுகளுடனும் காணப்படும்.

நீல நாக்கு நோயினைக் கண்டறியும் முறை, நோய்த் தீர்ப்பு மற்றும் தடுப்பு முறைகளை அடுத்த இதழில் காணலாம். ■

(தொடரும்)

- முனைவர் வே. புருஷோத்தமன்,
வணிக மேலாண்மை மற்றும் கூட்டாண்மை வல்லுநர், புதுவாழ்வு திட்டம், சென்னை.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034 (60,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor : S. CHINNAPPAN.

முட்டைக் கோழி/கறிக்கோழிப் பண்ணைகள் அமைக்க, குஞ்சுகள், தீவனம், உபகரணங்கள், மருந்து, தீவனக் கலவை செய்யும் கருவிகள் வாங்க, மற்றும் கோழிப் பண்ணைக்கான கட்டிடம் கட்டுவதற்கும் கடன் வழங்கப்படுகிறது. நீண்டகால கடனாகவும் அல்லது நடைமுறை மூலதனக் கடனாகவும் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்பில் அறிவும், அனுபவமும் மிகுந்த விவசாயிகள் கடன் பெறலாம்.

விளிம்புத் தொகை 10–15%

கடனுக்கான ஈடு, கடன் தொகையில் வாங்கப்பட்ட கோழிகள், கோழிப் பண்ணைக்கான கட்டிடம் மற்றும் உபகரணங்களே ரூ.1.00.000/– வரை போதுமானது. ரூ.1,00,000 மேல் நில அடமானம் தேவை.

வட்டி விகிதம் 11.20 முதல் 11.70% (நடைமுறைக் கடன்) 11.45 முதல் 11.95% (மூலதனக் கடன்)

திருப்பி செலுத்தும் காலம் : கட்டிடம் கட்டவும் மற்றும் கோழிப் பண்ணை அமைக்கவும் வாங்கிய நீண்ட கால கடன்களுக்கு 7 முதல் 9 வருடங்கள்.

கார்பரேட் அலுவலகம்:
254–260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

இந்தியன் வங்கி
इंडियन बैंक
Indian Bank
உங்கள் வங்கி • आपका अपना बैंक • YOUR OWN BANK

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH/(C)/455/15-17 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2015 - 17
Date of Publication : 2nd Week of the every month

தனிநபர் இல்லக் கழிப்பறை கட்டுமானம் குறித்த முக்கிய குறிப்புகள்



இடம் தேர்வு



- ❖ கழிப்பறை மற்றும் குழிகள் கட்டும் இடம் சமதளமாக இருத்தல் வேண்டும்.
- ❖ அமையவிருக்கும் குழிகள் (Pits) மற்றும் கழிப்பறை இடையே போதுமான இடைவெளி இருக்க வேண்டும்.
- ❖ கழிப்பறை கட்டும் இடமானது நீர் நிலைகளில் இருந்து குறைந்தது 45 அடி (15 மீட்டர்) தூரத்தில் அமைந்திருக்க வேண்டும்.



கழிப்பறை கட்டும் இடமானது நீர் நிலைகளில் இருந்து குறைந்தது 45 அடி (15 மீட்டர்) தூரத்தில் அமைந்திருக்க வேண்டும்.



அமையவிருக்கும் குழிகள் (Pits) மற்றும் கழிப்பறை இடையே போதுமான இடைவெளி இருக்க வேண்டும்.

கட்டுமானம் : கழிப்பறை மற்றும் உறிஞ்சுகுழிகள்



கழிப்பறை குறைந்தபட்சம் 0.9x1.2 மீ உள்ளளவு இருக்க வேண்டும்.
கழிப்பறையின் பீடம் தரைமட்டத்தில் இருந்து 22.50 செ.மீ (9 அங்குலம்) உயரத்தில் இருக்க வேண்டும்.

உறிஞ்சி குழி கழிப்பறையில் உள்ள நன்மைகள்

- குறைந்த இடவசதி
- குறைந்த செலவு
- பராமரிப்பது எளிது
- உரமாக மாறிய கழிவை அகற்றுதல் எளிது
- கொசு தொல்லை இல்லை
- ஒருமுறை கழிவறை பயன்படுத்த 2 லிட்டர் தண்ணீர் போதுமானது

பொதுவாக, தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டும் போது உறிஞ்சி குழி (Leach Pit) அமைப்பது சிறப்பானதாகும்.



இரண்டு உறிஞ்சு குழிகளுக்கும் இடையில் குறைந்தபட்சம் 1 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.



கழிப்பறையின் உறிஞ்சு குழி (Leach Pit) ஒவ்வொன்றும் சராசரியாக 0.90 மீட்டர் (3 அடி) ஆழத்திலும் மற்றும் 1 மீ விட்டத்திலும் இருக்க வேண்டும்.



கழிப்பறை பீடத்தின் பின்புற சுவருக்கும் கழிப்பறை கோப்பை / பீங்கானுக்கும் இடையில் குறைந்தபட்சம் 20 செ.மீ இடைவெளி இருக்க வேண்டும்.

ஊறிஞ்சி குழியின் மேல் பாகம் / மூடி ஆகியவை குழிக்குள் நீர் வழிந்தோடுவதை தவிர்க்கும் பொருட்டு தரைமட்டத்தில் இருந்து 15 செ.மீ உயரத்தில் அமைந்திருக்க வேண்டும்.

உறிஞ்சுக்குழியின் மேல் பாகம் / மேல் மூடி ஆகியவை வெளிக்காற்று உள்புகாதவாறு உறுதியாக மூடப்பட வேண்டும். அடிப்பாகம் மண் தரையாகவே இருக்க வேண்டும். சிமெண்ட் பூசி செய்யக் கூடாது.



உறிஞ்சுகுழியானது காற்றில்லாமலேயே மக்கும் தன்மை உடையதால் இதற்கு உறிஞ்சுகுழியில் இருந்து காற்று வெளியேற தனியாக குழாய் (Vent Pipe) பொருத்தத் தேவையில்லை. உறிஞ்சுக் குழிக்குப் பதிலாக செரிமானத் தொட்டி (Septic Tank) அமைக்கப்படும் நிகழ்வில் மட்டுமே Vent Pipe வைக்கப்பட வேண்டும்.



இணைப்புத் தொட்டி (Junction Chamber) அவசியமாக அமைக்கவும்.

உறிஞ்சுகுழியினை செங்கற்களால் ஆன தேன் கூடு வடிவத்தில் அமைத்தல் தொழில்நுட்ப ரீதியில் மிகுந்த சாத்தியமானதாகவும், பயனுள்ளதாகவும் இருக்கும். இதிலிருந்து கழிவு நீர் எளிதாக வெளியேறி மலக்கழிவுகள் மக்குவது துரிதமாக நடக்கும்.



கழிவறை குழிகளில் செங்கற்களுக்கு பதிலாக வட்ட வடிவ சிமெண்ட் வளையங்களை (Rings) பயன்படுத்தும் போது, அதில் போதுமான அளவில் துளைகள் (குறைந்தபட்சம் 10–12 துளைகள்) இடப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

கழிப்பறை கட்டுவோம்! பொது சுகாதாரத்தை பாதுகாப்போம்!!